விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 23 திங்கட்கிழமை (07.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 019

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போர்ட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இன்று முதல் செயற்படாவிட்டால் பல்கலைக்கழகத்துக்கு மூடுவிழா

## அமைச்சர் எஸ்.பி அதிரடி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று திங்கட்கிழமை முதல் முழுமையாகச் செயற்படத் தொடங்கும் எனவும், கைது செய்யப்பட்டுள்ள நான்கு மாணவர்களும் தைப் பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப் படுவார்கள் என தான் நம்புவதாகவும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

எனினும் இன்று திங்கட்கிழமை பல்கலைக்கழகம் முழுமையாக செயற்பட ஆரம்பிக்காவிட்டால் அதை மூடுவது என்றும் கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டதாகவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம் ஒழுங்கு சீர்குலையும்!

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலையக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமை பல்வேறு சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக இலங்கையில் இவ்வாறான ஓர் நிலைமை (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் விவகாரம்
## கட்சித் தலைவர்கள் இன்று கூடி ஆராய்வர்

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் தினத்தை தீர்மானிக்கும் பொருட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பு ஒன்று இன்று நடைபெறவுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இதன்போது நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள திவிநெகும சட்டத்தின் மூலம் விவாதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பிரதமநீதியரசருக்கு எதிரான பிரேரணை எதிர்வரும் 10-ம் மற்றும் 11-ம் திகதிகளில்நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும் என்று அரசாங்க தகவல்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு தினங்களிலும் இது குறித்த விவாதம் இடம்பெறலாமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா இலங்கைக்கு எச்சரிக்கை

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை, மனித உரிமை கடப்பாடுகள் தொடர்பில் சர்வதேசத் திற்கு பிழையான செய்தி ஒன்றைக் கொண்டு செல்லும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான விசேட நிபுணர் கெப்ரில்லா நோல், இது இலங்கையின் உள்விவகாரம் என்பதால் தமது கருத்தை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளவில்லை என்று கொழும்பு ஆங்கில செய்திதாள் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் இது சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு முரணான விடயமாகும்.

எனவே, இலங்கை அரசாங்கம் நீதித்துறையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் பிழை செய்த நீதிபதி ஒருவரை விசாரணை செய்யும்போது அடிப்படை நடைமுறைகள் பின் (20ஆம் பக்கம் பார்க்க)

## தாயை அணைத்தபடி மகன்; குழியிலிருந்து சடலங்கள் மீட்பு
### குஞ்சுப்பரந்தனில் துயரம்



கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் கிராமத்தில் வயல் கரையோரமாக நீர் தேங்கியிருந்த பள்ளத்தினுள் இருந்து இளம் குடும்பப் பெண்ணொருவரும், அவரது 5 வயது மகனுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சோகச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட கிளிநொச்சி குஞ்சுப் பரந்தனைச் சேர்ந்த சுகுமார் நிசாந்தினி (வயது-30), அவரது மகனாக சுகுமார் கிருத்திகன் (வயது-5) ஆகியோரின் மரணம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாயின் (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் இவ்வார இறுதிக்குள் ஜனாதிபதியால் பதவி நீக்கப்படக்கூடும்



பிரதம நீதியரசரின் பதவி தொடர்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த வாரம் அறம்கூறுநர்கள் சபையாக மாறவுள்ளனர்.

இந்தவார இறுதிக்குள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி விலக்கப்படலாம் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலும் எதிர்வரும் 11-ம் திகதி பிரதி நீதியரசரை பதவி விலக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாராளுமன்றில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன்பின்னர் அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக போராட்டத்தின் பின்னணியில் புலிகள் செயற்பட்டனர்
### சிங்கள நாளேட்டில் தெரிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மாணவர் போராட்டங்களின் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் புலம்பெயர் மக்களும் புலி ஆதாரவாளர்களும் இந்தப் போராட்டத்தின் பின்னணியில் செயற்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினா உறுதி செய்துள்ளனர்.

பலகலைக்கழக மாணவர் போராட்டம் என்ற போர்வையில் வடக்கில் மாணவர்களை திசைதிருப்பி ஆயுதம் ஏந்தச் செய்ய சிலர் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் குறித்து புலனாய்வுப் பிரிவினரும் படைத்தரப்பினரும் நடத்தும் விசாரணைகளை மனிதவுரிமை மீறல்களாக சர்வதேச சமூகத்திடம் பிரசாரம் செய்ய சிலர் திட்டமிட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான பிரசாரங்களில் மூலம் ஈழக்கோரிக்கையை வலுப் படுத்திக் கொள்ள புலி ஆதரவாளர்கள் முயற்சித்து வருவதாக சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெகுஜன வாக்கெடுப்பு ஒன்றில் மூலம் நாட்டை பிளவுபடுத்த புலி ஆதரவாளர்கள் முயற்சித்து வருகின்றனர். எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனி [illegible] (20ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் பலவீனமாகும் தாழமுக்கம்

இலங்கையின் தென் கிழக்காக வங்காளவிரிகுடாகடலில்காணப்படும் தாழமுக்கவலயமானது தற்போது பலவீனமடைந்து கொண்டிருக்கின்றதென வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரி க. சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் இதன் காரணத்தால் கிழக்கு, மேற்கு, மத்திய, சப்பிரகமுவ மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் அல்லது மாலை வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும்.

இடையிடையே சற்று பலமான காற்று வீசும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் திருகோணமலை முதல் அம்பாந்தோட்டை ஊடான மாத்தறை வரையிலான கடல் பிரதேசங்கள் கடும் கொந்தளிப்பாக காணப்படுவதுடன் அங்கு கடும் காற்றுடன் மழை காணப்படும்.

எனவே மீனவர் சமூகம் மற்றும் கடல்சார் தொழிலாளர்கள் தங்கள் கடல் நடவடிக்கையின்போது அவதானம் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் அதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்தில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் அதிபர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் வல்வெட்டித்துறை சிதம் பராக் கல்லூரி அதிபர் எஸ்.இராஜதுரையே படுகாய மடைந்தவராவார். (ந)




வாழும் கலைப்பயிற்சி

பிரணாஜாமா, சுதர்சன கிரிஜா, தியானம், யோகா

இடம்:- மகேஸ்வரன் மணி மண்டபம், நல்லூர்

நேரம் : அறிமுகவுரை 5P.M

காலம்:- 07.01.2013 (இ)

தொடர்புகளுக்கு: 0770474757



வடமராட்சியில்...

ஆங்கிலக் கல்விக்கு எனத் தனித்துவமான நிறுவனம்



OXFORD ENGLISH ACADEMY

P.K.Lane, Point Pedro

By Mr.B.Jyothy

புதிய ஆண்டுக்கான புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 09.01.2013 (4PM)

குறிப்பு:

அனுமதிகளையும் நேர அட்டவ... ...யையும்

அலுவலகத்தில் முன்கூட்டியே பெறவும் (C-2066)



பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

40% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829 (சி-1976)



- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24

Nov 2012-Apr 2013

தமிழ் மொழி மூலம்

(சி-2067)

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - ... வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administrati...
Dip. in Educational Management - ... டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

2013 January- 2013 June

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.limat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2013


### யாழ்.ஒஸ்மானியா கல்லூரி

# அதிபர் இடமாற்றம் மக்கள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து நேற்று மாலை யாழ்.ஐந்து சந்திப்பகுதியில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது யாழ்.மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினர் மௌலவி சுபியானுக்கு எதிராகவும் பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி நின்றனர்.

இமாற்றம்செய்யப்பட்ட அதிர்கடமையாற்றுவதன் மூலமே மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க முடியும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (எ-6)


YAALH ENGLISH ACADEMY

COURSES: Basic/Intermediate/Advanced

ஆசிரியர் : ச.முத்துலிங்கம் 773 212 711



செல்லா சினிமா யாழ்ப்பாணம்



A/C

DIGITAL dts SURROUND

துப்பாக்கி

விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்

விரைவில்

அலெக்ஸ் பாண்டியன்

10.30, 2.30, 6.30, 9.30


## இராணுவத்தின் ஆசிரியர்கள் நிறுத்தம்

(கொழும்பு)

வன்னிப் பிரதேச தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட இராணுவ ஆசிரியர்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வடமாகாண ஆளுநரிடமும் வட மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரிடமும் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியிருந்தது.

இதனை ஏற்றுக் கொண்ட உரிய தரப்பினர் உடனடியாக இராணுவத்தினரை விலக்கிக் கொள்வதாக உறுதியளித்தனர் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன், தலைவர்.வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். (எ-11)




கண்ணீர் அஞ்சலி

தம்பிராசா தேவராஜா

தேவியின் திருக்கோயிலை தினம்தோறும் அதிகாலையில் உனது திருத் தொண்டை உன் திருக்கரங்களால் திருவிளக்கேற்றி உன் திருக்கோயிலை அலங்கரித்த அடியவனை உன்பதம் சரணாகதி அடைய வைத்தாயோ அம்மா! பொதுப்பணிகளில் நிறைகுடமாகவும் அகந்தை கொள்ளா மனமும் அறிவும் குணமும் நிறையும் அமரர் தம்பிராசா குடும்பத்தின் திருமகனான எங்கள் குலத்தின் ஒளி விளக்கே! எம்மை விட்டுச் சென்ற தேனோ! உமது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



(1424)

தில்லையம்பதி வாழ் அன்பர்கள்.


## கரப்பந்தாட்டம்

(கைதடி)

கைதடி மேற்கு சன சமூக நிலையத்தின்64-வது ஆண்டு நிறைவை முன்னிட்டுகுமரன்விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் குமரன் சுப்பர்கிங் அணி 25:22, 28:30, 23:25, 25:23, 15:10 என்ற செற் கணக்கில் குமரன் சுப்பர் ஹீரோ அணியினை வெற்றிகொண்டது.


மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் | T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

05.01.2013 முதல் 10.01.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள் ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத் துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுக மாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறு கள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (சிவதர்சன் எல்கரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (சி-2060)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## குழந்தையின் அழுகை

ஒருவர் மிகவும் வேகமாக வந்து கொண்டிருந்தார்.

"என்ன சேர் விடயம்?" என்று கேட்டேன்.

வீட்டிலே ஒரே சத்தம்... அதுதான் புறப்பட்டு வெளியிலே வந்து விட்டேன் என்றார்.

"என்ன சத்தம்?" என்று கேட்டேன்.

"குழந்தை போடும் சத்தம்தான் சேர். எந்த நேரம் பார்த்தாலும் அழும் சேர்... என்னால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?" என்றார்.

"குழந்தை என்று இருந்தால், அழத்தானே செய்யும்... இதற்குப் போய் அலுத்துக் கொள்கிறீர்கள்" என்றேன்.

"என்ன இப்படியாகச் சொல்கிறீர்கள்..." என்று ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார்.

அதன்பின்தான் அவரிடம் சற்று விபரமாகப் பேசினேன். வைத்தியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட விடயத்தை அவரிடம் சொன்னேன்.

அழுகை என்பது குழந்தையின் பாஷை. அதற்குப் பேசத் தெரியாது. அதனால் அழுகிறது. அழுகை மூலமாகத்தான் குழந்தை தன்னுடைய தேவைகளைத் தெரிவிக்க முடியும். அதன் காரணத்தைப் பொறுத்து அது விதம் விதமாக அழும்...

அழுகிற விதத்தை வைத்தே அது எதற்காக அழுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

குழந்தையின் தாயார் அதை சுலபமாகப் புரிந்து கொள்வார். தந்தையாருக்கு அது அவ்வளவு விரைவாகப் புரியாது.

"சனியன்... என்னமோ தெரியாது கத்துகிறது" என்று சொல்லிவிட்டு அவர் தனது வேலையில் ஈடுபடுவார். அவ்வளவு தான் அவராலேயே முடியும்.

ஒரு குழந்தை பிறந்து ஓரிரு நாட்கள் சென்ற பின்னர், தான் படுக்கும் படுக்கை ஈரமானது என்றால் அதைத் தெரிவிக்கக் கத்தும். பசி... தாகம் எடுத்தால் சொல்ல முடியாது கத்துகிறது. ஏதாவது வலி ஏற்பட்டால் சத்தம் போடும். பிரகாசமான ஒளி குழந்தையின் கண்ணைக் கூச வைக்கும்.

எதிர்பாராத திடீர் அசைவுகள் குழந்தைக்கு மெல்லிய அதிர்ச்சியைக் கொடுக்கும். இவையெல்லாம் குழந்தையை அழ வைப்பவையாகும்.

நித்தமும் அழுகிற குழந்தைகள் உண்டு... எப்போதாவது சிணுங்கும் குழந்தைகள் இருக்கிறது. இவையெல்லாம் அந்தந்த குழந்தையின் சுபாவத்தைப் பொறுத்த விடயம்.

பசிக்காக அழும் குழந்தை மிகவும் பலத்த ஒலியுடன் அழும். இப்போதுதான் பால் கொடுத்தேன் என்று நினைக்கலாம். குழந்தை தேவைக்குத் தகுந்த மாதிரியோ அல்லது நேரத்திற்கு ஏற்றவாறோ சாப்பிடுவதில்லை... நாம் தான் அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இரவு வேளைகளிலும் சில குழந்தைகள் அழுவதுண்டு. சில குழந்தைகள் பேசாமல் அமைதியாகத் தூங்கும்.

குழந்தையின் சாப்பாடு ஜீரணமாகும்போது உண்டாகும் வாயுத் தொல்லையால் வயிற்று வலி ஏற்படலாம். அதனாலேயும் அது அழலாம்.

ஆகாரம் கொடுத்ததும் குழந்தையைத் தாயின் தோளிலே சாய்த்து முதுகைத் தடவிக் கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் கொடுக்கும் தாய்மாருக்குப் பத்தியம் கட்டாயம் தான்.

தாய் உண்ணும் உணவு தாய்ப்பால் வழியாகக் குழந்தைக்குச் செல்லும். சிலசமயம் தாயார் குடிக்கும் பசும்பாலில் கூட குழந்தைக்கு வயிற்று வலி வரலாம். பாலில் உள்ள புரதம் இந்த வேலையைச் செய்யும்.

குழந்தையானது இன்னொருவரின் அரவணைப்பிலே இருக்க விருப்பம் கொள்ளும்.

அதனால் ஒரு குழந்தை அழுதால் ஏன் அழுகிறது என்று புரிந்து கொண்டு உடனே அந்த அழுகைக்கான காரணத்தை கண்டறிந்து தாயார் அழுகையை நிறுத்த வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# முல்லை.கல்வி வலயத்திற்கு 185 ஆசிரிய ஆளணி தேவை

(முல்லாவி)

முல்லைத்தீவு கல்வி வலயத்தி லுள்ள 52 பாடசாலைகளில் 185 ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் இடம்பெயர்வின் பின் மீள்குடியேறி கல்வி பயிலும் 16 ஆயிரத்து 750 இற்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையும் சூழ்நிலை தோன்றியுள்ளதாக முல்லை.வலய கல்விப் பணிப்பாளர் ம.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்த நடவடிக்கையின் போது மிக மோசமாக பாதிக்கப்பட்ட கல்வி வலயம் முல்லை. வலயம் ஆகும்.

இங்கு பல பாடசாலைகளின் கட்டடங்கள் உட்பட பல பௌதீக வளங்கள் அழிக்கப்பட்ட நிலையில் மீள்குடியேற்றத்தின் பின் 56 பாடசாலைகளில் 52 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நடப்பாண்டில் ஆரம்பக் கல்விக்கு 73 ஆசிரியர்களும் இடை நிலைக் கல்வி பிரிவில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு 59 ஆசிரியர்களும் ஆங்கில கல்விக்கு 28 ஆசிரியர்களும் க.பொ.த. உயர்தர பிரிவில் கணித, விஞ்ஞான துறைக்கு 15 ஆசிரியர்களும் கலைப்பிரிவு, வர்த்தக பிரிவுக்கு 10 ஆசிரியர்களுமாக மொத்தம் 185 ஆசிரியர்கள் பற்றாக் குறையுடன் பாடசாலைகள் இயங்கி வருகின்றது.

இத் தொகை ஆசிரியர் பற்றாக் குறையுடன் வருடாந்த இடமாற்றத் தின்போது இங்கு கடமையாற்றிய ஒரு தொகுதி ஆசிரியர்களும் வெளி மாவட்டங்களுக்கு செல்லவுள்ளனர்.

இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் இக் கல்வி வலயத்திற்கு வருகை தந்த ஒரு தொகுதி ஆசிரியர்கள் எதிர்வரும் மாசி மாதம் கடமையை நிறைவு செய்து வெளியேறவுள்ளமையால் இவர்கள் தற்போது கல்வி கற்பிக்கும் பாடங்களுக்கும் வெற்றிடங்கள் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக முல்லை கல்வி வலயத்தில் சில நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வெற்றிடம் ஏற் பட்டுள்ளமை தொடர்பாக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளருக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள இடமாற்றத்தின்போது முல்லை. கல்வி வலயத்திற்கு போதியளவு ஆசிரியர்கள் வழங்கி உதவுவதாக உறுதியளித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# வீதி திருத்தப் பணிகளுக்காக ஏ 32 வீதி மூடப்பட்டிருக்கும்

யாழ்.- நாவற்குழி சந்தியில் இருந்து கேரதீவு- சங்குப்பிட்டி ஊடாக மன்னார் செல்லும் ஏ-32 வீதியானது திருத்த வேலைகள் காரணமாக இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை தினசரி இரவு 7 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 6 மணிவரை வீதிமூடப்பட்டு இருக்கும் என கிளி., முல்லை. மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ரி.கே.இளங்கீரன் அறிவித்துள்ளார்.

நாவற்குழி சந்தியில் இருந்து சங்குப்பிட்டிப்பால மாதவ தாம்போதி வரையான வீதி புனரமைக்கப்படவுள்ளது. இவ்வீதிக்கு மாற்றுப் பாதையாக பூநகரி- பரந்தன் ஊடாக ஏ-9 வீதியைப் பயன்படுத்தி யாழ்.,- மன்னார் செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பாதைப் புனரமைப்பு முடிவடைந்ததும் பாவனைக்கு திறக்கப்படுவது தொடர்பாக அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இவ் வேலை நடைபெற அனைத்து ஊர்திகளின் உரிமையாளர்கள் உட்பட சகலதரப்பு மக்களும் ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 200 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 110 | 160 | 180 |
| தக்காளி | 60 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 100 | 60 |
| கரட் | 100 | 80 | 120 | 120 |
| பூசணி | 35 | 30 | 40 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 160-170 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 140 | 160 | 140 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 80 | 90 | 140 | 120 |
| கறிமிளகாய் | 200 | 250-350 | -- | 200 |
| முருங்கைக்காய் | -- | 500 | 600 | -- |
| போஞ்சி | 80 | 120 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 160 | 140 | -- |
| கீரை - 1 பிடி | 15-17 | 30 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 50-60 | 90 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 30-40 | 35-38 |
| இராசவள்ளி | 110-120 | 150 | -- | 150 |
| வெங்காயப்பூ | -- | 260 | 40 | 80 |

# இராசி பலன்

*07.01.2013*
*(மார்கழி 23, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு*
*தசமி பிற்பகல் 1.13 மணிவரை*
*சுவாதி முற்பகல் 8.06 மணிவரை*
*இராகுகாலம் 8.02-9.32 மணிவரை*
*சுபநேரம் 12.32-2.02 மணிவரை*

**மேடம்** அதிர்ஷ்டகரமான நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், உடல் நலம் சீராகும், கடன் சுமை குறையும், முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர்.

**மிதுனம்** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள், பிள்ளைகளின் வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும்.

**கடகம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் முன்னேற்றமுண்டு, தொலைதூர செய்திகள் வந்து சேரலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**சிங்கம்** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், இளைய சகோதரத்தின் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி** எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், மாதர் நட்புண்டு.

**துலாம்** தொழில் ரீதியாக பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டல் அமைதி காண வேண்டிய நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் வருகையுண்டு, பயணங்களால் நன்மையுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**தனுசு** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கல்ந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், ஆன்றோர் சந்திப்புண்டு, தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**மீனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, கௌரவக் குறைவான நாள், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012-ல் இலங். பொருளாதார நிலை

## ஒரு கண்ணோட்டம்

இலங்கை 2012-ம் ஆண்டு பொருளாதார நிலையில் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்திருந்தது.

2012-ம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் 8 சதவீதமாக அமைந்திருக்கும் என எதிர்வு கூறப்பட்டிருந்த போதிலும், வருட நிறைவில் 6.8 சதவீத வளர்ச்சியே எய்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் நாட்டில் நிலவிய வெவ்வேறான சூழ்நிலைகள், காலநிலை மாற்றம், அரசியல் சூழல், பங்குச்சந்தை நிலைவரம், நாணய மாற்றுக் கொள்கை போன்றவற்றுடன், சர்வதேச நாடுகளில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் அமைதியற்ற சூழ்நிலை போன்றனவும் பங்களிப்பு வழங்கியிருந்தன.

நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான பங்களிப்புச் செலுத்தும் துறைகளாக நிர்மாணத்துறை, விவசாயத் துறை, தொலைத்தொடர்பாடல்கள் துறை போன்றன அமைந்துள்ளன. 2012 பெப்ரவரி மாதத்தை பொறுத்த மட்டில், பொருளாதாரத்துக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும் வகையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு அமைந்திருந்தது.

2012-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்த இலங்கை ரூபாயின் பெறுமதியை மிதக்கவிடும் கொள்கைக்கு அமைய, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களின் விலையிலும் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய நிலையை அரசு எதிர்கொண்டது.

இதன் காரணமாக எரிபொருட்களுடன் தொடர்புடைய இதர துறைகளும் தமது கட்டணங்களை மீளமைக்க வேண்டிய நிலையை எதிர்கொண்டதுடன், மார்ச் மாதமளவில் மக்களின் வாழ்க்கைச் செலவு பல மடங்கு அதிகரித்தது. இவ்வாறு விலை அதிகரிப்பு நிலை ஒருபுறம் இருக்க, மறுபுறம் அரசின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உலகப்புகழ்பெற்ற ஷங்கிரிலா ஹோட்டல் நிர்மாணப்பணிகள் கொழும்பில் ஆரம்பமாகின. இதற்காக மொத்த முதலீடாக 408 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, ஏப்ரல் மாதத்தில் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள்மீதான வரியை அரசு 5முதல் 50 வீதம் வரை உயர்த்தியிருந்தது.

இதன்காரணமாக இலகுரக மோட்டார் வாகனங்களின் விலைகள் பெருமளவு அதிகரித்திருந்ததுடன், மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களும் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியிருந்தன.

இதேவேளை,தரம் குறைந்த எரிபொருட்கள் இறக்குமதியின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் இருந்த நிலையில், ஈரானிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யவும்,ஈரானுக்கு பொருட்களை ஏ/தி அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருந்தது.

இதன்காரணமாக மானிய விலையின் அடிப்படையில் இலங்கை ஈரானிடமிருந்து பெற்று வந்த மசகு எண்ணெய் இறக்குமதியை இடைநிறுத்தி மாற்று நாடுகளை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன்போது மேற்படி தரம் குறைவான பெற்றோல் இறக்குமதி இடம்பெற்றதாகக் அரச தரப்பு குறிப்பிட்டிருந்தது.

ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி மேற்படியான பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்ட அதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையின் காரணமாக நாட்டின் மொத்த தேயிலை ஏற்றுமதி பெரிதும் பாதிப்படைந்தது.

இதன்காரணமாக தேயிலையின் விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டு, உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும் பெரும் சவால்களை எதிர்நோக்கியிருந்தனர்.

வெளிநாட்டு சூழ்நிலை பாதகமாக அமைந்த நிலையில் உள்நாட்டில் காலநிலையும் 2012-ம் ஆண்டைப் பொறுத்தமட்டில் வரட்சியானதாகவே அமைந்திருந்தது. இதன் காரணமாக நாட்டின் விவசாயத்துறை பெரும் பாதிப்பை எதிர்கொண்டது. தேயிலை உற்பத்தி, நெல் உற்பத்தி, மரக்கறிச் செய்கை என பல விவசாயப் பிரிவுகள் பின்னடைவை எதிர்நோக்கியிருந்தன. நாட்டில் நிலவிய வரட்சியின் காரணமாக மின்சார உற்பத்தியையும் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலும் தொடர்ச்சியான கோளாறுகள் ஏற்பட்ட வண்ணமிருக்க நாட்டின் மொத்த மின்சார தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக நாட்டின் (கொழும்பு நகரைத் தவிர) அனைத்து பகுதிகளிலும் மின்சாரத் தடையை அமுல்படுத்தியிருந்தது. சுமார் 1 மாத காலம் இந்த மின்சார தடை சுழற்சி முறையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு பங்குச்சந்தையை பொறுத்தமட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறந்த வெளிப்படையான விபரங்களை வழங்கும் வகையில் கடந்த யூலை மாதப் பிற்பகுதியில் புதிய எஸ் அன்ட் பி லங்கா சுட்டெண் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

2007-ம் ஆண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - சர்வதேச வங்கிகளுடன் மேற்கொண்டிருந்த ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல்முறைமைக்கமைவான எரிபொருள் கொள்வனவு முறைக்கமைய கட்டணங்களை செலுத்த மறுத்ததன் காரணமாக குறித்த வங்கிகள் சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்திருந்தன.

இதன்காரணமாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழக்கின் மூலம் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, சுமார் 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நட்டஈடாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாட்டின் சுற்றுலாத்துறையின் மற்றுமொரு மைல்கல்லாக, ஆண்டின் 10 லட்சமாவது சுற்றுலாப் பயணி இலங்கையை வந்தடைந்தார். இதன் மூலம் சுற்றுலாத்துறையில் 2012-ம் ஆண்டுக்கான மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகைக்கான இலக்கை இலங்கை எய்திருந்தமை விசேட அம்சமாக அமைந்திருந்தது.

உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலையில் வரிகளை உள்ளீர்க்கும் அரசின் நடவடிக்கை அவ்வப்போது நடந்தேறியிருந்தது. இதன் விளைவாக பொது மக்கள் அதிக விலை கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலையை எதிர்நோக்கியிருந்தனர்.

நாட்டில் யுத்தம் நிறைவடைந்து சுமார் 3 வருடங்கள் கடந்துள்ள நிலையில், பொருளாதார நிலையை முன்னேற்றும் வகையில், வெளிநாட்டு முதலீடுகளை கவரும் வகையிலான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

இந்தநிலையில், 2012-ம்ஆண்டின் பிற்பகுதியில் நாட்டின் பிரதம நீதியரசர் மீதான நடவடிக்கை நாட்டில் சட்டம் மற்றும் பொருளாதார கொள்கை போன்றவற்றில் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்துள்ளது.




# 2016-ல் 100 பில்.டொலர் பொருளாதாரம்

## மத்திய வங்கி நம்பிக்கை




2013ஆம் ஆண்டுக்கான நிதித் துறை மற்றும் நாணயக் கொள்கை அறிமுக நிகழ்வில் கலந்துகொண்ட மத்தியவங்கியின்ஆளுநர் அஜித்நிவாட் கப்ரால்கருத்துத் தெரிவிக்கும்போது,

நாட்டின் தற்போதைய 60 பில்லியன் டொலர் பொருளாதாரத்தை 2016-ம்ஆண்டளவில் 100பில்லியன் டொலராக உயர்த்துவதுடன், தலாவருமானத்தை 4 ஆயிரம் டொலர்களாகவும் அதிகரிக்க அரசு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது தலைக்குரிய வருமானம் 2,900 டொலர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள்,மின் கட்டணங்கள் மேலும் அதிகரிக்க வாய்ப்பு!

2013 ஆம் ஆண்டுக்கான நிதித் துறை மற்றும் நாணயக் கொள்கை அறிமுக நிகழ்வில் கடந்த வாரம் கலந்து கொண்ட மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கருத்துத் தெரிவிக்கும்போது,

பல தசாப்த காலமாக இலங்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை போன்றவற்றுக்கு அரசாங்கத்தின் மூலம் மானியம் வழங்கப்பட்டு வந்தது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரும் பின்டைவைச் சந்தித்திருந்தது.

அத்துடன் நாணயக் கொள்கைகளிலும் இந்தச் செயற்பாடு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலை மேலும் தொடர முடியாது.இதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலை எழுந்துள்ளது.

விலைகளைத் தளர்த்தி சர்வதேச சந்தை விலைகளுடன் நேரடியாகத் தொடர்புபடுத்த வேண்டிய நிலை குறித்து இந்த வருடம் அரசு ஆராயும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாயின் தற்போது சர்வதேச சந்தையில் நிலவும் எரிபொருள் விலைகளுக்கு அமைய, இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிக்கப்படும் எரிபொருட்களின் விலை மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

இதேவேளை கடந்த வாரம் சமையல் எரிவாயுக்களின் விலை 150 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என பொருளியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.



இலங்கையை வந்தடைந்த ஒரு மில்லியனாவது பயணி என்ற பெருமையை பெற்றுள்ளார் சீனாவைச் சேர்ந்த ஜயான் யிங். அவர் தமது கணவர் சகிதம் கடந்த டிசம்பர் 30ஆம் திகதி இலங்கை வந்தடைந்தார்.

# பங்குச்சந்தையில் இருந்து மிலங்கா சுட்டெண் நீக்கம்


கொழும்பு பங்குச்சந்தையின் செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட விலைச்சுட்டெண்களில் ஒன்றான மிலங்கா விலைச் சுட்டெண், ஜனவரி முதலாம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இலங்கை பிணையங்கள் பரிவர்தனை ஆணைக்குழுவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது விடுத்திருந்த அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பங்குச்சந்தையில் மிலங்கா விலைச்சுட்டெண் 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்படும் 25 நிறுவனங்களின் பங்குகளின் போக்கின் வெளிப்பாடாக அமைந்த மிலங்கா விலைச் சுட்டெண், கடந்த ஆண்டு S&P Index என்னும் சுட்டி அறிமுகம் செய்யப்பட்டதை தொடர்ந்து, தற்போது பாவனையில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வங்கி வடக்கு, கிழக்குக்கு ரூ.140 பில்.கடன் உதவி

## முன்னாள் தலைவர் தெரிவிப்பு



இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் தனது இராஜினாமாக் கடிதத்தை கையளித்துள்ளநிலையில்,அவர்நாளை இப் பதவியில் இருந்து விலகிச்செல்கிறார்.

தாம் இராஜினாமா செய்ததற்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் ஏற்பட்ட தகராறுதான் காரணம் என்ற பத்திரிகை செய்திகள் தவறானதென்று மறுப்புத் தெரிவித்த கலாநிதி காமினி விக்கிரமசிங்க, தாம் பதவியில் இருந்த காலத்தில் தனக்கு எவ்வித அரசியல் அழுத்தங்களும் இருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

யுத்தம் முடிபடைந்த பின்னர் இலங்கை வங்கி வடக்கு, கிழக்கில் உள்ள வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு 140 பில்லியன் ரூபாயை இலகு கடனாக கொடுத்திருக்கின்றது என்றும், இந்தத் தொகை வடக்கிற்கும் கிழக்கிற்கும் சரிசமாக பிரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை வங்கி 63 வருடங்களாக வடபகுதி மக்களுக்கு பெரும் சேவையாற்றியிருக்கின்றதென்று தெரிவித்த அவர், வங்கி வடக்குகிழக்குப் பகுதியில் உள்ள விவசாய பெருமக்களுக்கும் கால்நடை மற்றும் பால் பண்ணையாளர்களுக்கும் மீனவர்களுக்கும் மற்றும் சுயவேலைவாய்ப்பில் ஈடுவோருக்கும் கடன் உதவிகளை வழங்கி,அவர்களின் வாழ்வை வளம் படுத்துவதற்கு கடந்த மூன்றாண்டு காலத்தில் மகத்தான சேவையற்றியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டில் இலங்கை வங்கி 20 பில்லியன் ரூபாயை இலாபம் ஈட்டவுள்ளதென்றும், தாம் பதவிக்கு வந்த போது கிடைத்த இலாபத்தை விட இது 7 மடங்கு அதிகம் என்று சுட்டிக்காட்டினார்.

விரைவில் இலங்கை வங்கியின் சேமிப்பு வைப்பில் ஒரு ட்ரில்லியன் ரூபாயாக அதிகரித்துவிடும் என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதேவேளை, நீங்கள் ராஜினாமா செய்த பின்னர் என்ன செய்யப் போகின்றீர்கள்? எனக்கேட்டபோது,சிறிது காலம் ஓய்வெடுத்த பின்னர் நான் எனக்கு இருக்கும் பல அழைப்புகளை ஏற்று ஏதாவது ஒருபணியை தனியார் துறையில் ஏற்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 126.15 | 129.41 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.21 | 208.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 163.53 | 169.26 |
| சுவிஸ் பிராங் | 134.96 | 140.33 |
| கனேடிய டொலர் | 126.76 | 131.56 |
| அவுஸ்திரேலிய டொலர் | 130.79 | 136.03 |
| சிங்கப்பூர் டொலர் | 102.10 | 105.83 |
| ஜப்பான் யென் | 1.43 | 1.48 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.34 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.70 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு கிராமத்தில் அக்கறை வேண்டும்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் இயங்கும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் கிராம அபிவிருத்தியில் உரிய கவனம் செலுத்துவதில்லை என பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வெட்டிய தடிகள், குப்பைகளை வீதியோரங்களில் போடுவதால் நீர் வழிந்தோட முடியாமல் வீதிகள் பழுதடையும் நிலை ஏற்படுகிறது.

எடுத்ததற்கெல்லாம் அரசையே நம்பியிருக்காமல் கிராமங்களின் தேவைக்கேற்ப தாம் குடியிருக்கும் காணிகளுக்கு அருகில் உள்ள வடிகான்களையேனும் துப்பரவு செய்ய இச்சங்கங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். காணி உரிமையாளர்கள் இல்லாத விடத்து அக்காணிக்கு உரிமை கோரி அதைப் பராமரிப்பவர்களிடம் வலியுறுத்தி இவ்விடயத்தை செயற்படுத்த வேண்டும்.

இத்தகைய சங்கங்கள் கிராமங்களின் அபிவிருத்தியில் என்ன விதமாக செயற்படுகின்றன என்பதை மாவட்டமட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். மேலும் பொதுமக்கள் மத்தியில் கூட்டங்களை நடத்தி மேற்படி சங்கங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதில் அக்கறை காட்டவேண்டும்.

எனவே கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கிராம அபிவிருத்தி, மாதர் அபிவிருத்தி சங்கங்களும் பொதுமக்களை அணுகி விழிப்புணர்வை ஏற்படுத்தி கிராம அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டுமென அதிகமான கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# உச்சநீதிமன்ற தீர்ப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும்

## ஐ.தே.க வலியுறுத்தல்

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நாட்டுக்கு மேலும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணையை அரசாங்கம் எதேச்சாதிகார போக்கில் முன்னெடுத்துச் செல்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயற்பாடுகளினால் சர்வதேச அரங்கில் இலங்கை மேலும் தனிமைப்படுத்தப்படக் கூடும்.

குற்றவியல் பிரேரணை தொடர்பிலான நடவடிக்கைகள் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும். தேவை ஏற்பட்டால் புதிய சட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் கருத்து தெரிவித்துள்ளார். சட்டத்திற்கு முரணான வகையில் குற்றவியல் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே நாடாளுமன்றில் இது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

பிரதம நீதியரசர் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்ற செயற்குழுக்களுக்கு கிடையாது. குற்றவியல் பிரேரணை தொடர்பில் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது.

எனவே நாடாளுமன்றில் மீண்டும் விவாதம் நடத்த வேண்டிய அவசியமில்லை. சட்டவிரோத நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்துவது பொருத்தமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிராம மட்டத் தேவைகளை இனங்காண கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வவுனியா மாவட்ட மீன் எழுச்சித்திட்ட அலுவலகத்தினால் எதிர்காலத்தில் திட்டங்களை முன்னிலைப்படுத்தும் நோக்கோடு கிராம மக்களிடமிருந்து தேவைகளை இனம் காணும் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள பொருளாதார மீன் எழுச்சி அலுவலக கேட்போர் கூடத்தில் பிரதி திட்டப்பணிப்பாளர் டி.ஏ.டி ரஞ்சித் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது கிராமமட்ட பயனாளிகள் தமது தேவைகளையும் அதனூடான அபிவிருத்தி தொடர்பிலும் தம்மாலான கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதேவேளை எதிர்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் மக்களிடம் எடுத்துக் கூறப்பட்டதுடன் கிராம மக்களின் திட்டங்களும் உள்வாங்கப்பட்டிருந்தன. இக்கலந்துரையாடலில் விசேட விவசாய நிபுணர், நிதி அலுவலர் ஆகியோரும் மீன் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-266)

# வவு. பிரதான வீதி பாதசாரி கடவைகள் தெளிவில்லை

## விபத்துக்கள் அதிகரிப்பதாக சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் பிரதான வீதிகளில் பாதசாரி கடவையின் மஞ்சள் கோடு தெளிவில்லாத காரணத்தினால் வீதி விபத்துக்கள் தொடர்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியா நகரத்திலிருந்து புகையிரத நிலையத்திற்கு செல்லும் வீதியில் மஞ்சள் கோடு தெளிவில்லாது காணப்படுகின்றது. குறித்த பிரதேசமானது வவுனியா நகரசபைக்கு சொந்தமான இடமாக உள்ளது.

இப்பிரதேசத்திலேயே தொடர்ந்தும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் இப்பிரதேசத்திலே பிரதான பல வங்கிகள் காணப்படுவதனால் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றது.

இவ்வாறு வீதி கோடுகள் தெளிவாக காணப்படாமையினால் மக்கள் வீதியைக்கடக்கின்ற போது விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் கூடிய கவனம் செலுத்தி விபத்துக்களிலிருந்து உயிர்களை பாதுகாக்க முன்வருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-9-250)


கேம்பிரிஜ் கலாசாலை

நவிண்டில்




A/L 2015 பிரிவுகளுக்கான

கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம்



**வர்த்தகப்பிரிவு ஆசிரியர்கள்**

- கணக்கீடு : திரு.R.சாந்தகுமார்
- வணிகக்கல்வி : திரு.S.முகுந்தன் (கொழும்பு பிரபல ஆசிரியர்)
- பொருளியல் : திரு.V.ஜெகதீசன்

**கலைப்பிரிவு ஆசிரியர்கள்**

- தமிழ் : திரு.S.முரளிதரன்
- அளவையியல் : திரு.G.தர்மதேவன்
- இந்து நாகரிகம் : திரு.M.செல்வரட்ணம்
- பொருளியல் : திரு.V.ஜெகதீசன்

- அலகு ரீதியான பாடக் குறிப்புக்கள் வழங்கப்படும்
- ஆளுமை மிக்க ஆசிரியர்களால் தற்புதுமையாகக் கற்பிக்கப்படும்
- மாதாந்தம் தேர்வுகள் நிகழ்வதோடு தேர்ச்சி அறிக்கையில் புள்ளிகள் பதிந்து வழங்கப்படும்
- பாடசாலை மட்ட தவணைத் தேர்வு, தேசிய பொதுத் தேர்வு என்பவற்றிற்கு அமைவாக நெறிப்படுத்தப்படும்

ஆரம்பம் 12/01/2013 சனிக்கிழமை பி.ப 1.00 மணி

நிர்வாகி (405)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>உயரம்: 5'10"<br>கி.பா: 32.25, 12 இல் செவ்.<br>தகைமை: NCT Civil Engineering (தொழில் நுட்ப உத்தியோகத்தர்)<br>எ.பா: சூரி, செவ் 2,4,12 ஒரே வீட்டில்<br>தொ.இ: B -918 | பிறப்பு: 1992 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 20.5<br>தகைமை: A/L<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -929 |
| பிறப்பு: 1982 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 1<br>உயரம்: 5'6"<br>கி.பா: 11, 2 இல் செவ்.<br>தகைமை: பலசரக்கு மில்<br>தொ.இ: B -919 | பிறப்பு: 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 29.5<br>தகைமை: O/L<br>தொ.இ: G -944 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 1<br>உயரம்: 5'8"<br>கி.பா: 35.25, 4 இல் செவ்.<br>தகைமை: BCA (Executive Officer) Bank<br>தொ.இ: B -920 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 5'<br>கி.பா: 24, 5இல் சூரி, செவ்<br>தகைமை: BA (Hons).MA. விரிவுரையாளர் (அரச)<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -945 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 16.75<br>தகைமை: பிரதம உள்ளக கணக்காய்வாளர்<br>தொ.இ: B -922 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>உயரம்: 5'<br>கி.பா: 5.5<br>தகைமை: BA பட்டதாரி பயிலுநர் (பிரதேச செயலகம்)<br>தொ.இ: G -948 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம திருவாசக விழாவை முன்னிட்டு நடத்திய பண்ணிசைப்போட்டி முடிபுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**


கருணாகரன் கேணுகா(அராலி சரஸ்வதி ம.வி),யோகராசா டிவின்சியா(பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி),சக்திவேல் அபிராமி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

**மத்திய பிரிவு**

திருச்செல்வன் சுபாஷ்(பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி), இ. ரஸ்மினி(ஆவரங்கால் நடராசர் இராமலிங்கம் வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

பரமேஸ்வரன் கௌரீசன்(கொக்குவில் இந்துக்கல்லூரி, ரவிச்சந்திரன் ஸகிஷ்னா (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வி காயத்திரி கணேசமூர்த்தி(கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), சிவகுமார் சங்கவி (வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி). (அ-9-35)



நன்றி:-ஜலன்ட்.

# கடலுக்கு சென்றவர் நீரில் மூழ்கினார்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் ஆழியவளை கிராமத்தில் கடலின் சுழியில் அகப்பட்டு ஒரு வர் காணமல்போயுள்ளதாக ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தெரியவருவது, நேற்றுக் காலை கடற்றொழிலின் நிமித்தம் இரண்டுபேர் தமது கட்டுமரத்தை கடலில் தள்ளும் போது கடல் சற்று கொந்தளிப்பாகவும் கரைக்கடல் சற்று அலைகள் அடித்த வண்ணமும் காணப்பட்டது.

இதனையும் தாண்டி கட்டுமரத்தை,கடலின் மேலே கொண்டு செல்லமுற்பட்ட இரண்டு கடற்றொழிலாளர்களில் ஒருவரான ஆழியவளையைச் சேர்ந்த மயில் வாகனம் துரைசிங்கம்(வயது 57) என்ற கடற்தொழிலாளியே கடலில் காணப்பட்ட சுழியில் அகப்பட்டு காணாமல்போயுள்ளார்.

இதுவரை அவரது சடலம் கரை ஒதுங்கவில்லை என கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். இவரது சடலத்தை ஆழியவளை கடற்தொழிலாளர்கள் தேடி வருகின்றனர். (அ-3-64)

# கற்றல் செயற்பாடுகள் 9 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சை -2012 இற்கான விடைத்தாள் மதிப்பிடும் பணிகள் நடைபெறுவதன் காரணத்தால் புதிய ஆண்டின் முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறுமென பாடசாலை அதிபர் எஸ். சேதுர்ராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை தரம் 6 இல் அனுமதி வழங்கப்பட்ட புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறுமென அவர் குறிப்பிட்டுள்ளர். (அ-2)

# யாழ்ப்பாணத்தில் வேலைக்கமர்த்தப்படும் சிறுவர்களை கண்டுகொள்வார்களா?




(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள பல வர்த்தக நிலையங்களிலும் அங்காடி வியாபார நிலையங்களிலும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இதற்கு புத்திஜீவிகளும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சில வர்த்தக நிலையங்களிலும் பண்ணை வீதியிலுள்ள சில வர்த்தக நிலையங்களிலும் பழக்கடைகளிலும் இவ்வாறு சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இதுதவிர யாழ்.பஸ் நிலையத்திலும் ஊதுபத்தி விற்பனையிலும் சிறுவர்களே ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நல்லூர் கந்தன் ஆலயத்தில் கற்பூர விற்பனையிலும் கச்சான் விற்பனையிலும் சிறுவர்களே ஈடுபடுத்தப்படுகின்றனர்.

ஆரம்பத்தில் சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பில் அக்கறை கொண்ட சிறுவர் அமைப்புக்கள் தற்போது மௌனமாகியுள்ளனர். பணநோக்கம் கொண்ட பண முதலைகள் பலர் இவ்வாறு சிறுவர்களினை வேலைக்கமர்த்திவிட்டு அவர்களுக்கு குறைந்த ஊதியத்தினை வழங்கி விட்டு சிறுவர்களின் உழைப்பில் தாம் இன்பம் காண்கின்றனர். 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் அவர்களின் விருப்பத்துடனோ அல்லது கட்டாயத்தின் பேரிலேயோ வேலைக்கமர்த்துவது சிறுவர் உரிமை மீறலாகும்.

சிறுவர்களினை வேலைக்கமர்த்துபவர்களினை தண்டிக்கவும் சட்டத்தில் இடமுண்டு. தமது குடும்ப வறுமையின் பொருட்டு இவ்வாறு அவர்கள் சிறுவயதிலேயே தொழிலுக்கு செல்ல வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது.

இதனால் அப் பாலர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படுகின்றது. அண்மையில் யாழ்.வர்த்தக சங்கத்தலைவர் ஜெயசேகரம் தெரிவிக்கையில்,

மிகவும் குறுகிய காலத்திற்குள் 500 இற்கும் அதிகமான சிறார்கள் பாடசாலைக் கல்வியினை விட்டு இடை விலகியுள்ளனர் என கூறியிருந்ததோடு கல்வியில்லாமல் வாழ்க்கை இல்லை என அறிவுரையும் வழங்கியிருந்தார். குடும்பத்தின் வறுமை காரணமாக கொதிக்கும் வெயிலின் மத்தியிலும் தலைக்குத் துணியைக் கட்டிக்கொண்டு வீதியோரமாக இருந்து பனங்கிழங்கு விற்பனையில் ஈடுபடும் சிறுவர்களினையும் இவர்கள் இனங்கண்டு அவர்களுக்கு மட்டுமல்லாது வறுமையில் வாடுகின்ற அவர்களின் குடும்பங்களுக்கு இவ்வர்த்தகர்கள் உதவுவதற்கு முன்வரல் வேண்டும் என புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தாமுண்டுதம் குடும்பமுண்டு என்று வாழாது இவ்வாறு வறுமையின் காரணமாக தமது இளமைக்கால கல்வியினை பறிகொடுத்து விட்டு ஏங்கி நிற்கும் சிறார்களுக்கு அனைவரும் உதவிக்கரம் நீட்ட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-4)




# கூறுவிலை கோரும் மடங்களை பிரதேச, நகர சபைகள் கையகப்படுத்த முயற்சி

## வடமராட்சி வடக்கு க.தொ.கூ.ச. சமாசம் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு சமாசத்திற்கு கீழ் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படுகின்ற கூறுவிலை மடங்கள் பிரதேச, நகர சபைகள் கையகப்படுத்துமாக இருந்தால், அது கடற்றொழிலாளர்களினை பாதிக்கும் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கச் சமாசம் தெரிவித்துள்ளது.

கடற்றொழிலாளர்களின் நலன்களினை கருத்திற் கொள்ளாது மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தினை உரியவர்கள் தடுத்து நிறுத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்விடயம் குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்திற்கு கீழ் பதின்நான்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் உள்ளன.

இப் பதின்நான்கு சங்கங்களில் பெரும்பாலான சங்கங்களிற்கு ஜப்பான் நாடு ஜெய்க்கா திட்டத்தின் கீழ் கூறுவிலை மடங்களை அமைத்து கொடுத்திருந்தது.

இக்கூறுவிலை மடங்கள் சமாசத்தின் தலைமையின் கீழும் சங்கங்களின் வழிநடத்தலும் இதுவரை காலமும் இயங்கி வந்துள்ளது.

கூறுவிலை மடங்களின் மூலம் கிடைக்கும் வருமானம் கடற்றொழிலாளர் சமாசத்திற்கு சென்றதோடு அதன்மூலம் அனர்த்த சூழ் நிலைகளின் போது பாதிக்கப்படும் மீனவர்களிற்கும் கடலில் நிகழும் இறப்புக்களின் மீட்பு நடவடிக்கைகளிற்கும் சிறு அபிவிருத்திகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனினும் கடற்றொழிலாளர் சங்கங்களின் கீழ் இயங்கி வரும் கூறுவிலை மடங்களினை தற்போது பிரதேச, நகர சபைகள் தமது நிர்வாகத்திற்குள் கொண்டுவந்து அதன் மூலம் கிடைக்கும் வருமானங்களினையும் தாமே கையகப்படுத்த முயன்று வருகின்றன.

பிரதேச, நகர சபைகள் இக் கூறுவிலை மடங்களினை ஏலத்தில் விட்டு இந் நிதியினை பெற முயல்கின்றனர்.

இத் திட்டம் இன்றோ நாளையோ செயற்படுத்தப்படவும் உள்ளது.

இத்திட்டமானது ஏற்கனவே நஷ்டத்தின் கீழ் குறைந்த வருமானத்தின் கீழ் வாழ்கின்ற கடற்றொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும். நீண்டகாலமாக சமாசத்திற்கு கீழ் இயங்கி வரும் கூறுவிலை மடங்களினை திடீரென பிரதேச நகர சபைகள் கையகப்படுத்த நினைப்பது ஏன்? என சம்மேளனத்தினர் கேள்வியெழுப்புகின்றனர்.

இதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் ஏற்கனவே தவிசாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளோம்.

எனினும் அவர்கள் அதனை கைவிடுவதாக தெரியவில்லை. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல், இயற்கையின் சீற்றம் என பல இடங்களிற்கு மத்தியில் வாழும் பிரதேச, நகர சபைகளின் இத்திட்டத்தினால் மேலும் பாதிப்படையப்போகின்றோம்.

மீனவர்களின் மீண்டுமொரு போராட்டத்திற்கு இவர்கள் வழிகோரக் கூடாது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-4)

# தைப்பொங்கல் விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதி (அன்னச் சத்திரம்) கடையிற்சுவாமிகள் குருவார சிவன் தேவஸ்தானத்தின் தைப்பொங்கல் விசேடபூஜை வழிபாடுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுமென ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார்.

---

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் தைப்பொங்கல் விசேட பூசைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை சதுர்த்தி பூசைகள் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருதலும் நடைபெறுமென தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புப் பணியின் முன்னோடி சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்

1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பிறந்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மா இன்று இருந்தால் அவருக்கு 88 வயதாகும். அம்மையார் கடந்த 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி சிவபதம் எய்திய பின்னரான காலப்பகுதியில் அவர் ஆற்றிய வியத்தகு பணிகள் சிந்தி க்கப்படுகின்றன.

நாவலர் பெருமான் கடந்த 19 ஆம் நூற்றாண்டை தமதாக்கிக் கொண்டு சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய பெருமகனாவார். அவர்களுக்குப் பின் வந்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் சைவப் பிரசங்கமரபையும் பதிப்புப் பணியையும் தொடர்ந்தவர். நாவலர் அச்சுக்கூடம் வாங்க தமிழ்நாடு சென்றார். அவருக்கு அங்கு திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற கௌரவப்பட்டதை வழங்கிப் பெருமை பெற்றது.

கலாநிதி பண்டிதை சிவத்தமிழ் செல்வி அம்மாவுக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பர மணிவாசகர் சபை சிவத்தமிழ்ச் செல்வி என்ற கௌரவப்பட்டத்தை வழங்கிப் பெருமை பெற்றது.

நாவலர் சைவ சமயத்தையும் தமிழ்க் கல்வியையும் வளர்க்க சமயப் பிரசாரப் பணி செய்ய நூற்பதிப்புப் பணி பெரும் உந்து சக்தியாக விளங்கியது. நம் நாட்டிலே பல்லாயிரக்கணக்கான நூல்களை அச்சுவாதனம் ஏற்றித்தந்த பெருமை சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தையே சாரும். இவ் அச்சகம் குரும்பசிட்டி தந்த பெருவள்ளல் ஈழகேசரி நா. பொன்னையாவினால் கடந்த 1928 ஆம் ஆண்டு சுன்னாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இவரே 1926 ஆம் ஆண்டு தலைக்குமி புத்தகசாலையையும் தொடக்கினார். பெரும் புகழ்பூத்த ஈழ. கேசரி பத்திரிகையை 1930 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி முதன் முதல் வெளியிட்ட பெருமகன் நா. பொன்னையா என்றால் மிகையாகாது.



சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெயரில் அச்சுக் கூடம் வாங்கி பதிப்புப் பணி செய்ய முற்பட்டார். அவ்வேளையில் அன்று திருமகள் அழுத்தகத்துக்கு முகாமையாளராக இருந்த க.சிவகுமாரை அணுகினார். தமது சிறிய தந்தையார் திருமகள் அழுத்தகத்தை விற்பனை செய்ய இருப்பதாகத் தெரிவித்தார். இச் செய்தி அறிந்த காரைநகர் தந்த சமூகத் தொண்டரும் பிரபல சட்டத்தரணியுமான எஸ். கே. பொன்னம்பலம் ஐயா, தாம் வழங்குவதாக சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாருக்குத் தெரிவித்தார். அன்றைய நிலையில் திருமகள் அழுத்தகத்தின் பெறுமதி அதிகமாக இருந்த போதிலும் மிகவும் குறைந்த பெறுமதியாக பதினொரு இலட்சம் ரூபாவைப் பெற்று ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்துக்கு வழங்கி உதவினார். பதிப்புப் பணிக்கு உதவிய பரோபகாரி எஸ்.கே. பொன்னம்பலம் ஐயாவையும் அவரின் பெறாமகன் க.சிவகுமாரையும் சிவத்தமிழ் செல்வி அம்மையார் தமது வாழ்நாள் பூராகவும் நன்றி பாராட்டத் தவறவில்லை.

1989 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட திருமகள் அழுத்தகம் தேவஸ்தானத்தின் அச்சுவேலைகள், துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணிகள், நல்லூர் துக்காதேவி மணிமண்டபப் பணிகள் என்பனவற்றுக்கு பதிப்பு வேலைகளில் பெருந்தொண்டு ஆற்றியது.

பதிப்புப் பணியில் நாவலர் பெருமானின் பெரியபுராண வசன நூல் 1983 ஆம் ஆண்டில் வெளிவந்தது. தேவஸ்தான மலர்கள், மகளிர் இல்ல மலர்கள், ஆண்டு தோறும் வெளிவரும் கணக்கு அறிக்கைகள், ஸ்ரீலலிதாசகஸ்ர நாமம், சைவக் கிரியைகளும் விரதங்களும் போன்ற அறிஞர்களின் நூல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் செய்து வந்த பன்முகப்பட்ட சமூகப் பணிகளில் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியும் சைவ பிரசாரப் பணியும் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கு சமயப் பிரசாரப்பணி என்கின்றபோது அருள் ஒளி மாதாந்த சஞ்சிகையும் பதிப்புப் பணிக்கு முதன்மை தருகின்றது.

2002 ஆம் ஆண்டு மகோற்சவ கால தீர்த்த உற்சவத்தன்று ஆவணித் திருவோணத்தில் முதலாவது சஞ்சிகை வெளிவந்தது. மாதந்தோறும் பூரணை நாளை முன்னிட்ட செவ்வாய்க்கிழமைகளில் இதன் வெளியீடு நடைபெறும். ஒவ்வொரு மாதத்தில் வரும் சிறப்பு மிகு விழாக்கள், விரதங்களின் மகிமைகள், சமய நெறிகளைக் கூறும் கட்டுரைகள் வெளிவரலாயின. இதன் அச்சுப் பணியை நல்ல முறையில் திருமகள் அழுத்தகம் ஆற்றி வருகின்றது. நாவலர் பெருமானுக்குப் பின் சி.வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புப் பணி போன்று முன்னோடியாகத் திகழும் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரை அவரின் பிறந்த நாளில் சிந்திப்போமாக.

கா.சிவபாலன்

## காணிக்காக அடிக்கடி முரண்பாடு; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(சிவநகர்)

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு கழகத்தினருக்கும் அக்காணியில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தினருக்கும் இடையில் தொடர்ச்சியான முறுகல் நிலை ஏற்பட்டு வருகிறது.

இப் பிரதேச மக்களினாலும் விளையாட்டு கழகத்தினராலும் மேற்படி விற்பனை நிலையத்தை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய வேண்டுமென பல தடவைகள் முறையிடப்பட்டு சில முறுகல் நிலைகள் ஏற்பட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி கள் விற்பனை நடைபெறும் காணிக்குள் நேற்று முன்தினம் மலசலகூடம் அமைப்பதற்கு முயன்றவேளை மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன்போது இவ்விடத்திற்குவருகைதந்த கள் விற்பனையாளர்கள் சங்க முகாமையாளருக்கும் பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரனும் நிலைமைகளை விளக்கினார்கள்.

இதன்பின்பு குறித்த பிரதேச சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மலசலகூடம் கட்டுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. உரிய மலசலகூடம் கட்டுவதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை என்வும் காணிக்கான உரிமைப் பிரச்சினை தொடர் கதையாக உள்ளதாகவும் காரணம் காட்டப்பட்டது.

எனவே இவ்விடயத்தில் மாவட்ட அரச அதிபர், மதுவரித் திணைக்களம், உதவி அரசாங்க அதிபர், கரைச்சி பிரதேச சபை, கள் விற்பனை சங்கத்தினர், விளையாட்டு கழகத்தினர் மற்றும் அதிகாரிகள் அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று கூடி பலகாலமாக தொடரும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என அப்பிரதேச மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (அ-3-254)

## நீதித்துறை வீழ்ந்தால் ஜனநாயகம் பாதிக்கும்

### கரு எம். பி தெரிவிப்பு

ஒரு நாட்டின் நீதித்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டால் அது அந்த நாட்டின் ஜனநாயகத்தில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது இராணுவ ரீதியான மோதல்கள் மூண்டுள்ளமைக்கு ஜனநாயகமின்மையே காரணமாகும்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ள 18 ஆவது திருத்தச் சட்டம் பாரிய் அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளதாக கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமகாலத்தின் செயற்பாட்டில் இல்லாத மூன்று அரசியல் கட்சிகளின் பதிவுகளை இரத்து செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

சிறுசிறு குறைபாடுகளைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்கு அவற்றின் ஆவணங்களை வழங்க இந்த மாத இறுதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய கட்சிகள் இன்றும் நாளையும் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த காலம் ஒதுக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள 50 சதவீதமான அரசியல் கட்சிகள் கட்சி பதிவு சட்டத்தின் கீழ் சொத்துக்கள் பொறுப்புக்கள் குறித்த விபரங்களை சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

## 50 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான வருமானம் பெறுவோருக்கு வரி

### நீதி அமைச்சின் செயலாளர்

மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமாக வருமானம் ஈட்டுவோரிடம் வரி அறவீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மாதாந்தம் 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபா வரையில் வருமானம் ஈட்டும் நபர்களிடம் 2 வீத வரியை அறவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை 50 ஆயிரம் ரூபாவிற்கு குறைவாக வருமானம் ஈட்டுவோரிடம் வரி அறவீடு செய்யப்படமாட்டாது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியனவே நாட்டில் அதிக நட்டமடையும் நிறுவனங்களாகும்.

மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்காக பெருமளவு பணம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு உண்டு என்றார். (அ-2)

## சிப்பிக்குள வீதிப்பாலம் புனரமைக்கப்படுகிறது

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சிப்பிக்குளத்தினூடாக தந்திரிமலை செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் தரமற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ளமையினால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இவ்விடயத்தை வலம்புரி பத்திரிகையில் சுட்டிக்காட்டியதை அடுத்து அப்பாலத்தின் நிலைமையினை வடமாகாண ஆளுநரின் பிரத்திய ஆணையாளர் மீரா முகைதீன் சென்று பார்வையிட்டதுடன் வன்னி அபிவிருத்திக் குழு தலைவர் அமைச்சர் ரிசாட் பதியுதீனின் கவனத்திற்கும் கொண்டு வந்தார்.

மதவாச்சி செட்டிகுளம் வீதியில் அடப்பன் குளத்திற்கு அண்மையில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகாமையில் தந்திரி மலை நோக்கி செல்லும் பிரதான வீதியில் சிப்பிக் குளத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பிரதான பாலமே நீர் வடிந்தோடுவதற்கும் மழை காலங்களில் பிரயாணம் செய்யக்கூடிய வகையிலும் அமையப்பெறாமையினால் அப்பகுதி மக்கள் பெரும் இடையூறுகளை எதிர் நோக்கி வந்திருந்தனர். இந்நிலையில் தற்போது பாலத்திற்கான திரு த்த வேலைகள் துரித கதியில் இடம் பெற்று வரு வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-9-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமலின் முறையற்ற கருத்துக்கு நீதிமன்றில் வழக்கு தாக்கல்

(கொழும்பு)

வீடமைப்பு மற்றும் பொறியியல் துறை அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து ஐ.தே.க. தென்மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான மைத்திரி குணரட்ன உயர்நீதிமன்ற நீதியரசர்களிடம் கோரிக்கை மனுவொன்றை கையளித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் உயர்நீதிமன்றம் வெளியிட்ட விளக்கம் குறித்து அமைச்சர் கடுமையான கருத்துக்களை வெளியிட்டிருந்ததாக சட்டத்தரணி மைத்திரி குணரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்ற விளக்கம் தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவித்த கருத்து வருமாறு,

இவ்வாண்டு மார்ச் மாதம் அமெரிக்கா கொண்டு வரவுள்ள யோசனைக்கு தேவையான அனைத்து பின்னணி கதைகளையும் பூரண சர்வதேச அழுத்தங்களை உருவாக்க பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தமது பதவியை பயன்படுத்துகிறார் என்று நாம் ஏற்கனவே எச்சரித்திருந்தோம். அது தற்போது தெளிவாக புலப்படுகிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தக் கருத்தை கூறவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றம் உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியது. திருடனின் அன்னையிடமே சென்று தஞ்சம் கோருவது போன்ற செயற்பாடே இங்கு நடைபெற்றது.

உயர்நீதிமன்றத்தின் தலைமையை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவே ஏற்று நடத்தி வருகின்றார் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச சாடியிருந்தார்.

இந்த முறையற்ற கருத்து தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தாம் கோரியுள்ளதாக தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ச உயர் நீதிமன்றம் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கு நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து அவரை குற்றவாளியாக்க வாய்ப்புள்ளது. முன்னர் ஒரு தடவையும் கூட அரசாங்க அமைச்சரான எஸ்.பி. திஸாநாயக்கவும் நீதிமன்றத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டு சட்ட சிக்கலுக்கு உள்ளாகியிருந்ததாகவும் அவர் அந்த குற்றத்தை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அதேபோன்று அமைச்சர் விமல் வீரவன்சவையும் அவரது கருத்து தொடர்பில் நீதிமன்றம் ஏற்றி சிறைக்கு தள்ள முடியும் என்றும் தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன கூறியுள்ளார். (அ-2)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் உதவி

(பூந்தோட்டம்)

செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவில் உள்ள நீலியாமோட்டை மற்றும் பிரமனாலங்குளம் பிரிவுகளில் வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டன.

நீலியாமோட்டைப்பகுதியில் உள்ள சுமார் 120 குடும்பங்களுக்கு கொக்குவிலை சேர்ந்த வளர்மதி முன்னேற்றக் கழகம் ஊடாக ஐக்கிய அமெரிக்க நாட்டில் உள்ள அன்புநெறி வேலைத்திட்டத்தின் கீழ் சி.குகனேந்திரன் உலருணவுப் பொதிகளை வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வளர்மதி முன்னேற்றக்கழக மூத்த தலைவர் செ.செல்வராஜா, சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், கிராம சேவை உத்தியோகத்தர் இராஜரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(அ-9-266)

# மடுக்கரை மகா வித்தியில் 30 குடும்பங்கள் தங்கியிருப்பு

## அடிப்படை வசதியின்றி அந்தரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மடுக்கரை பகுதி மக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

வெள்ளப்பெருக்கின் காரணமாக மடுக்கரை கிராமம் கடுமையாக பாதிப்படைந்திருந்த நிலையில் குறித்த கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து மடுக்கரை மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்தனர்.


இந்த மக்களில் அதிகளவானவர்கள் மீண்டும் தமது வீடுகளுக்கும் உறவினர்களுடைய வீடுகளுக்கும் திரும்பிச் சென்றுள்ளனர். எனினும் சுமார் 30 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் வரை தமது வீடுகள் தற்போது வெள்ள நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுவதாகவும் தாம் தொடர்ந்தும் குறித்த பாடசாலையில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த பாடசாலையில் உள்ள மக்களை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் மாலை நேரில் சென்று சந்தித்தார். இதன் போது மடுக்கரை பாடசாலையில் தங்கியுள்ள குறித்த மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

தாங்கள் மீண்டும் வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளபோது அதிகாரிகள் எம்மை உடன் பாடசாலையை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

தற்போது இங்கு அடிப்படை வசதிகள் இன்றி உள்ளோம். எங்களில் பலருக்கு தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. எனவே, எங்களை தொடர்ந்தும் சில தினங்களுக்கு பாடசாலையிலே தங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இப் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர், நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலகரின் கவனத்திற்கு கொண்டு சென்றார். (அ-2)




சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு சங்க நிதியிலிருந்து சுயதொழில் ஊக்குவிப்பு சுழற்சி முறையில் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்க பொருளாளர் திருமதி உமாதேவி செல்வராசா கடன் தொகையை பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும் அருகில் சங்கத் தலைவி மற்றும் செயலாளர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# தொண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்காது

(கொழும்பு)

சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் அடிபணியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்ட சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தற்போது பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விவகாரத்தில் தலையீடு செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் போது பாரியளவு சர்வதேச சவால்களை எதிர்நோக்க நேரிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் நோர்வேயிலிருந்து செயற்பட்ட தரப்பினர் தற்போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்காக தேங்காய் உடைத்து பூஜைகளை செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நாட்டின் அரசியல் சாசனத்திற்கு அமைவான வகையில் செயற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# திவிநெகும சட்டமூலத்திற்கு மூன்று எதிர்க்கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

நாட்டில் சர்ச்சைக்குரிய திவிநெகும சட்டத்திற்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வாக்களிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் போது அதற்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே மூன்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

திவிநெகும சட்டம் தொடர்பில் உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட 12 பரிந்துரைகளில் 10 பரிந்துரைகளை அமுல்படுத்துவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இந்த சட்டத்தை நிறைவேற்றி அமுல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (அ-2)

# அரசியல் சாசனத்திற்கு எதிராக செயற்பட்டால் போராட்டம்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய மக்கள் போராட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. அரசியல் சாசனத்திற்கு எதிராக செயற்பட்டால் சபாநாயகர், அரசாங்கம் அல்லது எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக குரல் கொடுக்கும் உரிமை நாட்டின் பொது மக்களுக்கு காணப்படுவதாக ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உழைக்கும் வர்க்கத்தினர், புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் பொது மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர். சட்ட விளக்கம் அளிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு காணப்படுவதாக அரசியல் சாசனத்தின் 125 ஆம் சரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் நீதிமன்றம் ஏற்கனவே சட்ட விளக்கத்தை அளித்துள்ளது. இந்த சட்ட விளக்கத்தை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் சட்ட விளக்கத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என சபாநாயகர், அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாகவும் இது அரசியல் சாசனத்திற்கு விரோதமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிடும் தரப்பினருக்கு தண்டனை விதிக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். (அ-2)

# வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சியை எதிர்ப்போம்

## அமைச்சர் டியூ தெரிவிப்பு


நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பிலான வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களிக்கப்படும் என அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கும்.

ஏனைய இடது சாரி கட்சித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோரும் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கக் கூடியதாக எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர்

**07**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

இந்தா இந்தான்னு ஓடிமுடிஞ்சு போச்சு ஒருவருசம். இப்ப மழையில்ல; ஆனா கிணத்துல தண்ணி இருக்கு.

ஊர்ல ஆள் செத்துப்போச்சேன்னு அழுதுக்கிட்டா இருப்பான் வெட்டியான்? வெட்டியானும் வெவசாயியும் ஒண்ணுதான்; யார் செத்தாலும் மண்ணத் தோண்டித்தான் ஆகணும்.

அடுத்த வெள்ளாமைக்கு ஆசை கொடுக்குது சீனிச்சாமிக்கு. முக்கி முக்கி யோசிக்கக் கடைசியிலே கடன் வாங்கறதுன்னு முடிவு பண்ணிட்டாரு.

அந்தக் கடன்தான் அவர் பொழப்பையே பொளந்து போட்டுட்டுப்போன கோடாலி.

சுத்திமுத்தி இருக்கிற அஞ்சாறு ஊருக்கும் கடன் வாங்குறது காலன் கிட்டத்தான்.

அது மூணு தலைமுறையாக் களவாண்டு கஞ்சி குடிச்ச குடும்பம். கருது கசக்கியே கஞ்சி குடிச்சவன் அவங்க தாத்தன். அதனாலேயே அவனுக்குக் கோணிச் சாக்குன்னு பேரு. அவங்கப்பன் பேரு [illegible]. திருடிட்டு வந்த தேங்காய் வீட்டுக்குள்ளயே மொளக்குச்சி நட்டு அதுல உரிச்சு விக்கிறவன். ஊர் மந்தையில சம்மணம் போட்டு ஒக்காந்துக்கிட்டுத் தொடை மடிப்புல சரக்க வச்சு இடுக்கிக்கிட்டு ஆள் பாத்து அரவம் பாத்துக் கஞ்சா வித்தே காசு சேத்தவன் காலன்; கறாரான ஆளு.

"யோவ் சீனிச்சாமி! நீ பெரிய மனுசனா இருக்கலாம். ஆனா தொழில் தொழிலா இருக்கனும். பத்திரத்தக் கொண்டா; பணம் வாங்கிட்டுப்போ. வருசத்துக்குப் பதினைஞ்சு மூட்டை நெல்லு வட்டி. அசல்ல கடைசி ரூபா கழியிற வரைக்கும் வட்டி வட்டிதான்; ஒரு மூட்டை நெல்லும் கொறையாது; மூணே வருசத்துல அசல் வந்தாகனும். வரலேன்னு வச்சுக்க, பாதிக்கிரயம் போட்டு நெலத்த எடுத்துக்கிருவேன். இது மட்டும் எழுத்துல வராது. வாய் மொழி மட்டும்தான். சம்மதமா?"

"சம்மதம்பா"

அந்தக்காலன்கிட்ட வாங்குன கடன்காசை வச்சு, சரிஞ்சு விழுந்த கெணத்தச் சரி செஞ்சாரு சீனிச்சாமி. மழையில அழிஞ்ச பூமிய மேடுகோடு பாத்தாரு. வெள்ளச் சோளம் வெதைச்சாரு;

அடகு கிடந்த- அண்டா, தண்டட்டி, கொலுசு மீட்டுக்கொடுத்தாரு. சாப்பாட்டுக்குத் தானியம் வேணுமே, தேவதானப்பட்டிச் சந்தைக்குப்போயி நெல்லுஞ் சோளமும் வாங்கி உள் வீட்டுல அடஞ்சு வச்சாரு.

ஒரு நாள் நெலா வெளிச்சத்துல வீட்டு வெளித் திண்ணையில தட்டா வரங்கா அவிச்சுத் தானும் தின்னுக்கிட்டுப் பிள்ளைகளுக்கும் உரிச்சு உரிச்சுக் கொடுத்துக்கிட்டுப் பெருங்குரலெடுத்து ஒரு பாட்டும் பாடுனாரு.

## வறட்சின்னா வறட்சி; கடும் வறட்சி; ஆத்துல ஊத்துல காத்துல ஈரமில்லா வறட்சி

நம்ம ஊரு விவசாயிக கடைசியாப் பாட்டுப் படிச்சது எப்பன்னு கேட்டுப்பாருங்க... மேலயும் கீழயும் முழிப்பாக. பல ஆளுக பாடுனதே இல்ல; சில பேரு பாட்டுப்படிச்சுப் பலவருசம் இருக்கும்.

பொழப்பு செத்துக் கிடக்கற எடத்துல, பாட்டு பொழச்சுக் கெடக்கறதில்ல.

சீனிச்சாமி அன்னைக்குப் பாட்டுப் படிச்சாரு.

பிள்ளைகளோடு சேந்து மாடுகன்டுகளும் பஞ்சாரத்துக்குக்குள்ளயிருந்து கோழிகுருமானுங்களும் அண்ணாந்து அண்ணாந்து பாத்ததுக.

அதுதான் சீனிச்சாமி கடைசியாகப் படிச்ச பாட்டு.

வெள்ளச் சோளம் விதைச்ச நாள்ல இருந்து நாலுவருசம் மழை இல்ல நாட்டுல.


நாலு வருசத்துக்குள்ள பெறந்த பிள்ளைக யாரும் மழைன்னா என்னான்னு கண்ணக் கொண்டு கண்டதில்ல. மழைன்னு சொன்னாலும் புரியாது; முழிக்குங்க பாவம்.

வறட்சியின்னா கடும் வறட்சி. ஆத்துல ஊத்துல ஈரமில்லன்னாப் பரவாயில்ல- காத்துல ஈரம் இல்ல. காடுகளாத் தெரிஞ்ச மலைகளெல்லாம் மரம் மட்டை காஞ்சதுல மொட்டைப் பாறைகளா நிக்குதுக.

தங்கப் பூண் போட்டு வச்சாலும் வெடிக்காமப் போகுமா வெள்ளரிப் பழம்? வத்திப்போன கம்மா குளம் எல்லாம் வெயில்ல வெடிச்சுக் கிடக்குதுக பாளம் பாளமா.

பூமி பொறக்காது சாமி... ஒரு மழையக் கொடுத்துட்டுப் போன்னு வருண பகவானப் பாத்துக் கையெடுத்துக்கும் பிடறதுக்கும் எலை இல்ல எந்த மரத்துலயும்.

இன்னொரு பத்து வருசப் பஞ்சத்தையும் சமாளிப்பேன்னு பச்சை கட்டி நிக்குது புளியமரம் ஒண்ணு மட்டும். கப்பைக் கெழங்கும் மக்காச் சோளமும் சனங்களுக்குக் கடவுளாத் தெரியிற காலமாகிப் போச்சு.



உசுரையும் மானத்தையும் மட்டும் கையில புடிச்சு வறுமையில சிக்கிச் சீரழிஞ்சு நிக்குது சீனிச்சாமி குடும்பம்.

நெருக்கடி பண்றான் அந்தக் காலன்.

"நாலு வருச வட்டி அறுவது மூட்டை நெல்லாம். ஒரு மூட்டையும் வரலையாம். அப்பிடியே நிக்குதாம் அசலு. கெடு முடிஞ்சு வருசம் ஒண்ணாச்சாம். இதுக்கு மேலயும் வட்டி அசல் வரலேன்னா ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆகிப்போகுமாம். சொல்லிவிட்டானப்பா காலன். அவன் கெட்ட சாதிப் பயலப்பா. சீனிச்சாமி! பாம்போட பகை வேணாமப்பா. சொல்லுறதச் சொல்லிப்புட்டேன்; குடுக்கற வழியப்பாரு"

அஞ்சாறு தடவை காலன் ஆளுக படியேறி வந்து திருப்பித்திருப்பி ஒண்ணையே சொல்லவும் சீனிச்சாமியும் ஒரே பதிலைத்தான் சொல்லி அனுப்புனாரு.

"யப்பா... நான் என்ன வச்சுக்கிட்டா வஞ்சகம் பண்றேன். மழை தண்ணி பேயட்டுமப்பா. காலன் கடனைக் குடுத்துட்டு நான் குடிக்கறதுதான் கஞ்சி"

ஆனா அதுக்குப் பிறகுதான் நடக்கக்கூடாத அந்தக் கேவலம் நடந்துபோச்சு.

சித்திரை [illegible]

வெறகெடுத்துக்கிட்டு அந்தி மசங்க அட்டணம்பட்டிக்குள்ள நுழையறாரு சீனிச்சாமி. வீட்டுக்குள்ள வெக்கை தாங்காம ஊர்ச்சனத்துல பாதி ஒக்காந்திருக்கு அரசமரத்தடி மந்தையில. ரெண்டு மூணு வெறும் பயலுகளச் சேத்துக்கிட்டு சீனிச்சாமிய ஊர்மந்தையில வழி மறிக்கிறான் காலன்.

"ஏய் சீனிச்சாமி! எப்பத் தரப்போற வட்டிமொதல?"

"உசுர வித்தாச்சும் உன் கடனைக் கொடுத்துருவனப்பா. பஞ்சம் கழியட்டும் பொறு" தலைச்சுமை விறகை எறக்காமத் தணிஞ்சு பேசுனாரு சீனிச்சாமி.

"சரி... பஞ்சம் கழியல. என்ன பண்ணுவ?"

"பத்திரம் உன்கிட்டத்தான இருக்கு?"

"பத்திரத்தை வச்சுப் பல்லுப்பொடி மடிக்கிறதா? நாக்கு வழிக்கறதா?"

ஊரே வேடிக்கை பாக்குது.

சீனிச்சாமிக்கு உடம்பு கூசுது; உசுரு ஒடுங்குது.

"வேணாமப்பா. வார்த்தைய விட்டுறக் கூடாது. திருப்பி வாங்க முடியாது. பொறு உன் கடனை எப்படியும் குடுத்திர்றேன்"

"எப்பிடியும்னா... எப்பிடிக் குடுப்ப? உள் மகள ஒரு வாரத்துக்கு உப்பந்தரிசுல கூட்டிவிட்டுக் குடுத்துருவியா?"

அந்த வார்த்தையில செத்தே போனாரு சீனிச்சாமி. தலை ஒரு சுத்துச் சுத்தனதுல தவறிருச்சு விறகுக்கட்டு; காலன் கால்ல விழுந்து போச்சு ஒரு கட்டை.

"ஏய் கடங்காரா! வெறகுக் கட்டையைப் போட்டு என்னையே கொல்லப் பாக்குறியா?"

சீனிச்சாமி இடுப்புல இருந்த வேட்டிய இழுத்து உருவி அவரு கழுத்துல போட்டு ஒரு முறுக்கு முறுக்கிட்டான் காலன்.

அன்னைக்கின்னு பார்த்து உள் கச்சைவேற கட்டித் தொலைக்கல பாவம்.

"ஏ காலா! விடப்பா! உன் கடனைக் கட்டாமச் செத்தா போவாரு சீனிச்சாமி? எவன் கழுத்துல எவன் வேட்டி போடறது? மனுசன் மானத்த வாங்கிட்டியேப்பா"

ஊர்ப் பெருசுக போட்டசத்தம் காதுல விழுகுது. ஆனா மூளைக்கு ஏறல சீனிச்சாமிக்கு.

பொணம் நடந்துபோற மாதிரி போய்ச் சேந்தாரு வீட்டுக்கு.

மந்தையில் விழுந்த வெறகுக் கட்டை யாரோ தூக்கிட்டுப்போயி அவர் வீட்டு வெளித் திண்ணையில போட்டுட்டுப் போனாக.

பெரியகுளம் ராவுத்தர் மாந்தோப்புல வேலை பாத்துட்டு, ஒரு சாக்கு மாங்காயோட சைக்கிள் மிதிச்சு வந்து சேந்த கருத்தமாயி காதுல, நடந்த கேவலத்தை அரையும் குறையுமாச் சொல்லி வச்சாக ஊராளுக.

ஊர் ஒடுங்கிருச்சு.

மாடுகன்டு கத்தறதும் நாய் ஊளையிடறதும் தவிர ஒரு சத்தமும் இல்ல ஊருக்குள்ள. சீனிச்சாமி வீட்டுக்குள்ள இருக்கலாமா அணையலாமான்னு கண்ணச் சிமிட்டி முழிக்குது சீமத்தண்ணி வெளக்கு.

புருசன், பொண்டாட்டி- மக மூணுபேரும் வடிச்ச குறுணைய வடி கஞ்சியில அள்ளிப்போட்டுக் குடிச்சு முடிச்சுட்டாக.

பயக ரெண்டுபேரும் வரட்டும்னு ரெண்டு கும்பாவுல கஞ்சி ஊத்திவச்சிருக்கா ஆத்தா. மூத்தவன் சுழியன் மொதல்ல வந்தான். "இன்னைக்கும் இந்த இத்துப்போன கஞ்சிதானா?" எடதுகால்ல ஒரு எத்து எத்தவும் சுவர்ல முட்டிக் கஞ்சியக் கொட்டிக் கவுந்து விழுகுது கும்பா.

"இந்த வீட்டுல மனுசன் இருப்பானா?" வெளியில ஓடி இருட்டுல கரைஞ்சு காணாமப் போனான் சுழியன்.

இளைய பய கருத்தமாயி வந்தான். "ஆத்தா! இந்த மாங்காய நாளைக்கு மந்தையில வித்துக்க" மாங்காச் சாக்கைத்தூக்கி ஒரு ஓரம வச்சுட்டுக் கஞ்சி குடிக்க ஒக்காந்தவன் கும்பாவ இழுத்தான்.

"ஏலே கருத்தமாயி! கயிற அத்துக்கிட்டு ஓடுதடா கன்னுக்குட்டி" ஒத்த வீட்டு மூளி காக்காத் தொண்டையில கத்தவும் கஞ்சியத் தள்ளிட்டு ஓடுனான் கருத்தமாயி.

அலஞ்சு கண்டு புடிச்சு, வெளியெல்லாம் விரட்டிக் கயித்தக் கட்டைவிரல் கால்ல மிதிச்சு, கன்டக் கொண்டாந்து கட்டி வச்சிட்டு வீட்டுக்குள்ள நுழையறான்.

வெளித்திண்ணையில செத்துக் கிடக்கு பூனை.

உள்ள போயிப் பாத்தா-

அப்பன் செத்துக் கெடக்கான் கட்டில்ல.

ஆத்தா சுவத்துல சாஞ்ச மேனிக்குத் தன்னைத் தானே சாத்தி வச்சிருக்கா.

கட்டிலுக்குக் கீழ பாயில வெள்ளை வெள்ளையா நுரை தள்ளி வாய் ஆன்னு தொறந்து கிடக்கா தங்கச்சி.


"யாத்தே... யப்பே..." கருத்தமாயி கத்துன சத்தத்துல ஒருங்களிச்சுப் படுக்கப்போன ஊரு விசுக்குன்னு எந்திரிச்சு வெளிய வந்து கூடிருச்சு.

மூணு பொணத்தையும்- தூக்கி- நிமித்தி- செவக்கி- சிங்காரிச்சுச் சாத்தி வைக்கிற நேரத்துக்குள்ள- காலன் கையி வேற- காலு வேற- தல வேறன்னு ஒண்ணொண்ணா வந்து விழுகுது தெருவுல ; நாறப்பய உறுப்ப ஒரு நாய்கூட மோந்து பாக்கல.

வெளித் திண்ணையில கிடந்த வெறகுக்கட்டையில மூணு பொணங்களும் வெந்து அடங்கற நேரத்துல கருத்தமாயப் புடிச்சு வேன்ல ஏத்தி, தெச காணாம ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போய்க்கிட்டிருக்கு தேவதானப்பட்டிப் போலீசு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சிறுவர் அரங்கம்

333

## ஐயோ பிசாசு!



தருமனுக்குச் சொந்தமாக ஒரு தென்னந்தோப்பு இருந்தது. தோப்பின் நடுவில் குடிசை கட்டி அங்கு அவன் தன் மனைவி கெளரியுடன் வசித்து வந்தான். இதைத்தவிர அவனுக்கு நிலமும் இருந்தது. ஒருநாள் வயலிலிருந்து வீடு திரும்பும்போது வழியில் ஒரு அடர்ந்த புதரின் அருகே இருந்த ஒரு கருங்கல் அவன் கவனத்தை ஈர்த்தது. நன்கு பொலிஷ் செய்யப்பட்ட கல் போல் கறுகறுவென அது மின்னுவதைக்கண்ட தருமன் அதை தன் வீட்டுக்கு எடுத்துச் சென்று பெட்டியில் வைத்தான்.

தருமனின் மனைவி கெளரிக்கு உடல் நலம் குன்றியது. வீட்டுவேலைகளைச்செய்ய ஒரு வேலைக்காரி கிடைத்தால் நல்லது என்று தோன்றியது. வீடு திரும்பிய தருமனிடம் ஒரு வேலைக்காரியை வீட்டு வேலைக்கு அமர்த்தும்படி கேட்டுக்கொண்டாள். பின்பு உண்ட களைப்புத்தீர தருமன் கண்ணயர கெளரி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

யாரோ கதவைத்தட்டும் ஓசை கேட்டு விழித்துக் கொண்ட தருமன் கதவைத்திறக்க அங்கு நன்கு கறுத்த கட்டை குட்டையான ஒரு பெண்மணி தலைவிரிகோலமாக நின்று கொண்டு இருந்தாள்.என்ன வேண்டுமென்று தருமன்

### அம்புலிமாமா கதைகள்

கேட்க ஐயா! உங்கள் வீட்டுக்கு வேலைக்காரி தேவையென்று அறிந்தேன். அதற்குத்தான் நான் வந்துள்ளேன் என்றாள். அவள் பெயரைக் கேட்டதற்கு பிச்சி என்றாள். உடனே தன் மனைவியிடம் தருமன் பிச்சியை அறிமுகம் செய்து வைத்து அவளை வேலையில் அமர்த்தச் சொன்னாள். ஆனால் பிச்சியின் தோற்றத்தைக் கண்டு மிரண்ட கெளரி அவளைத் திருப்பி அனுப்பிவிட்டாள்.

அன்றிரவு கெளரி வீட்டு



வேலை பற்றி சலிக்க தருமனுக்கு கோபம் வந்தது. வீடு தேடி வந்தவளை வேண்டாம் என்று விட்டு இப்போது ஏன் புலம்புகிறாய்? என்றான்.

அவளைப் பார்த்தாலே பயமாக இருந்தது என்றாள். அப்போது ஏதோ தட்டும் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். ஆனால் அவர்களைத்தவிர வீட்டில் யாரும் இல்லை.

ஒருநாள் தருமன் தனது தென்னை மரங்களிலிருந்து காய்கள் பறிக்கவேண்டிய ஆள் வராததால் என்ன செய்வதென்று கவலைப்பட அங்கு பிச்சி தோன்றினாள். நான் தேங்காய் பறிக்கட்டுமா? என்று கேட்டவள், சரசரவென பல தென்னை மரங்களில் ஏறி காய்களைப் பறித்துப் போட்டாள். பின்பு கூலி ஏதும் கேட்காமலே சென்று விட்டாள். அவள் செய்கையைக் கண்ட தருமன் ஆச்சரியப்பட கெளரி வந்தவள் பிசாசாகத் தான் இருக்கும் என்றாள்.

மற்றொரு நாள் கெளரி தோட்டத்துக் கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டு இருக்கும் போது ராட்டினக் கயிறு அறுந்து குடம் கிணற்றில் விழுந்தது. ஐயோ குடம் போய்விட்டதே என்று கெளரி புலம்ப பிச்சி அங்கே வந்தாள்.

இதற்குப் போய் ஏன் கவலைப் படுகிறாய் அம்மா? என்றவள் கிணற்றினுள் தடாலெனக் குதித்தாள். உடனே தன் கணவனை கெளரி அழைக்க அழைக்க அதற்குள் கிணற்றில் விழுந்திருந்த குடத்தை பிச்சி எடுத்து அவர்களிடம் அளித்தாள்.

அதுவரை இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகம் தீர்ந்து தருமனுக்கும் பிச்சி ஒரு பெண் வடிவிலுள்ள பிசாசுதான் என்று நிச்சயமாகத் தோன்றியது. பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்ட நினைத்த தருமன் பிச்சியைக் கை எடுத்துக் கும்பிட்டு பிச்சி! நீ சாதாரண மானிடப் பெண்ணல்ல என்று தெரிகிறது. அதனால் நீ எங்களைத் தேடி வராமலிருந்தால் நன்றாக இருக்கும் என்று கெஞ்சினான்.


உடனே இடியிடிப்பது போல் சிரித்த பிச்சி பரவாயில்லையே! நான் யார் என்று கண்டுபிடித்து விட்டாயா. ஆம், நான் பிசாசு தான்! என்னுடைய பொருளை என்னிடம் திருப்பிக்கொடுத்தால் அப்புறம் நான் ஏன் உங்களைத் தேடிவரவேண்டும் என்று கேட்டதும் தருமனுக்கும் கெளரிக்கும் ஒன்றும் புரியவில்லை.

அதுதான்! ஒரு கருங்கல்லை உன் பெட்டியில் பதுக்கி வைத்து இருக்கிறாயே! அதைத் தான் கேட்கிறேன் என்றது பிச்சி. தனது சில மந்திர சக்திகளை அந்தக்காலில் வைத்திருந்தது பிச்சி! ஒருநாள் அதை தருமன் எடுத்துக்கொண்டு போவதைப்பார்த்துத் திடுக்கிட்டது.

தருமனை பயமுறுத்தி அதை திரும்பப்பெறாமல் அவனிடமும் கெளரியிடமும் நல்ல விதமாக நடந்து தன் கல்லைத் திரும்பப் பெற முயன்றது.

பூ! இவ்வளவுதானா! இப்போதே கொடுத்து விடுகிறேன் என்று தருமன் வீட்டுக்குள் செல்ல கெளரிக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. பெண்கள்தான் காரியவாதிகள் ஆயிற்றே! உடனே அவள் பிச்சியிடம் பிச்சி! பிச்சி! நீ சமர்த்தல்லவா! எங்கள் கிராமத்துக் கால் வாய் வறண்டுவிட்டது.

தென்னந் தோப்புக்கும் வயலுக்கும் தண்ணீர் போதவில்லை. நீதான் எங்களுக்காக நல்ல ஆழமான கிணறு ஒன்று தோண்டித் தருவாயா? அந்தக் கிணறு வற்றாத கிணறாக இருக்கவேண்டும் என்றாள்.



உடனே பிச்சி அவள் கேட்டபடியே வயலுக்கும் தோப்புக்கும் பயன்படும் படி அருகில் ஓர் ஆழமான கிணறை உருவாக்கியது. பின்பு தருமனிடம் தன் மந்திரக்கல்லைப் பெற்றுக் கொண்டு பிச்சி அவர்களிடமிருந்து பிரியாவிடை பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு உதவ வேண்டும்

## மாந்தை மேற்கு விவசாய அமைப்பு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வெள்ளம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாய குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என மாந்தை மேற்கு பிரதேச விவசாய அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்தால் அழி[illegible]ந்துள்ளதுடன் பாதிப்படைந்துள்ளது. அத்துடன் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை அதிகம் அழிவடைந்தும் பாதிக்கப்பட்டும் உள்ளன.

பல குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன் விவசாய வீதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் கடந்த சிறுபோகத்திலும் நாட்டில் நிலவிய வரட்சி காரணமாக அதிகமான பாதிப்பு ஏற்பட்டு நெற்பயிர்கள் அழிவடைந்த போதும் எமது விவசாயிகளுக்கு எவ்வித நட்ட ஈடும் வழங்கப்படவில்லை. இதனால் வங்கிக்கடனை மீளச் செலுத்த முடியாத நிலைக்குள் அவர்கள் தள்ளப்பட்டனர்.

ஆனால் அதே காலத்தில் பாதிக்கப்பட்ட வடமத்திய மாகாணத்திற்கு கால போகத்திற்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் எமது வேண்டுகைக்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஆகவே தமது குடும்ப வாழ்வாதாரத்தை விவசாயச் செய்கையின் மூலமே நம்பி வாழும் விவசாயிகள் வங்கிகளின் கடன் பெற்றும் நகை அடகுவைத்தும் நீண்ட எதிர்பார்ப்புடன் விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

ஏற்கனவே யுத்தத்தால் ஏதிலிகளாக்கப்பட்ட இவர்கள் இவ்வாறாக இயற்கையின் கோரத்தாலும் தொடர்ந்து இழப்பது என்பது வாழ்வியலுக்கான இருப்பை வாழ்வாதார நிலையில் வலுவற்றதாக்கிவிடும்.

எனவே அரசாங்கம் பாதிக்கப்பட்ட எமது விவசாயிகளுக்கு முழுமையான நட்ட ஈடு வழங்க வேண்டும். அத்துடன் அவர்கள் மீண்டும் நெற் செய்கையில் ஈடுபட விதை நெல், உழவு கூலி, உரம் ஆகியன இலவசமாக வழங்க வேண்டும்.

உடைப்பெடுத்த குளங்கள், கால்வாய்கள், விவசாய வீதிகள் இவற்றையும் மீளமைத்துத் தரவ வேண்டுமென அவ் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வவு.பொது வைத்தியசாலையில் மருந்து வழங்குவதில் பாரபட்சம்

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

(மிருசுவில்)

வவுனியா பொது வைத்தியசாலைக்கு மருந்து பெறுவதற்கு செல்லும் நோயாளர்கள் பல மணி நேரமாக காத்திருந்து மருந்து எடுக்க வேண்டிய நிலைமை காணப்படுவதாக நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் இவ் வைத்தியசாலைக்கு சென்ற வயோதிப நோயாளி ஒருவர் குறிப்பிடுகையில்,

தான் காலை 9 மணியளவில் வைத்தியசாலைக்கு சென்றதாகவும் முன் நிரலில் அமர்ந்திருந்த போதும் ஒரு மணியளவிலே மருந்து எடுக்க வேண்டிய நிலைமை நேர்ந்ததாகவும் கவலை தெரிவித்துள்ளார்.

அதுவும் வாக்கு முரண்பாட்டுக்கு பின்னரே மருந்து எடுக்க வேண்டியிருந்தது.

மேலும் தனக்குப்பின்னால் இருந்த பலர் தனக்கு முன்னரே சென்றுவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அரச வைத்தியசாலைகளிலும் பக்கச்சார்பு நிலைமை ஏற்பட்டு விட்டதா? என நோயாளிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் இங்கு வரும் நோயாளர்கள் வைத்தியசாலையில் அதிகளவு நேரம் இருப்பதனால் தமது நோய் காரணமாக பெருமளவு துன்பப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

எனவே இவ்வாறான நிலைமைகளை மாற்றி நோயாளர்களின் நலனை கருத்திற் கொண்டு அனைவரும் செயற்படவேண்டுமென நோயாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-85)

# மூன்று வருடங்கள் கடந்த போதும் வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை

## மாணிக்கபுரம்,வள்ளுவர்புரம் கிராம மக்கள்

அடிப்படை வசதிகள் இன்றி மூன்று வருடங்களையும் தாண்டி தங்காலிலிக கொட்டகையினுள் பல துன்பத்திற்குள் வாழ்ந்து வரும் மாணிக்கபுரம்,வள்ளுவர்புரம் கிராம மக்கள் உதவிக்காக காத்திருக்கின்றனர்.

மீள்குடியேற்றத்திற்கு பின்னர் இக்கிராம மக்களில் ஒரு தொகுதியினருக்கு மட்டுமே நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இரண்டாவது கட்ட வீடுகள் வழங்கப்பட இருந்த குடும்பங்களுக்கு சில அரச சார்பற்ற நிறுவனங்களினால் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட்ட கொட்டகைகள் அனைத்தும் ஆறு மாதங்களுக்கு மட்டுமே பயன்படுத்த கூடியவை.

இந்நிலையில் மூன்று வருடங்களைத் தாண்டி தற்போது பெய்த கடும் மழை காரணமாக கொட்டகையின் மரத்தாலான கால்கள் உக்கி ஒவ்வொன்றாக சரிந்து விழத் தொடங்கியுள்ளது.

வள்ளுவர்புரம் கிராமத்தில் சோ ஆ நிறுவனத்தினால் அமைத்து கொடுக்கப்பட்ட கொட்டகை ஒன்று கடும் மழையின் போது சரிந்து விழுந்துள்ளது.

அத்துடன் இக் கொட்டகைகளுக்கான மரத்தடிகளை காடுகளுக்கு சென்று வெட்டுவதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

எனவே அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சகல நிவாரணங்களும் நிறுத்தப்பட்டு பல துன்பத்திற்குள் வாழ்ந்து வரும் இம் மக்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து உதவ வேண்டும் என்பதே இம் மக்களின் அவாவாக உள்ளது. (அ-3-260)

# நீதிமன்றத்தின் உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்தால் போராட்டம் வெடிக்கும்!

## ஐ.தே.க பிரதித் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்றின் உத்தரவிற்கு அரசாங்கம் கீழ்ப்படியத் தவறினால் பாரிய மக்கள் போராட்டம் வெடிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரசாங்கம் உதாசீனம் செய்தால் போராட்டங்கள் வெடிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவிற்கு மதிப்பளிக்காவிட்டால் பாரிய பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு இந்த அரசாங்கத்தின் தலைவிதியை மாற்றியமைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமை மக்கள் கிளர்ச்சியாக மாற்றமடையக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த மக்கள் போராட்டத்தை வழி நடத்தும் பாரிய பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோரை அடக்குமுறைக்கு உட்படுத்தவும் அரசியல் நோக்கங்களை முதனிலைப்படுத்தியும் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றமை வருத்தமளிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)




★1325-போர்த்துக்கல் மன்னனாக நான்காம் அல்பொன்சோ முடி சூடினான்.

★1558-காலே (Calais) நகரத்தை இங்கிலாந்திடம் இருந்து பிரான்ஸ் கைப்பற்றியது.

★1598-ரஷ்யாவின் ஆட்சியை போரில் கூதுனோவ் கைப்பற்றினான்.

★1608-வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுண் நகரம் தீயினால் அழிந்தது.

★1610-கலிலியோ கலிலி ஜூபிட்டர் கோளின் நான்கு இயற்கை செய்மதிகளைக் கண்டறிந்தார்.

★1782-அமெரிக்காவின் முதலாவது வர்த்தக வங்கி, வட அமெரிக்க வங்கி திறக்கப்பட்டது.

★1789-ஐக்கிய அமெரிக்காவில் முதற்தடவையாக ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது.

★1841-யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கப்பட்டது.

★1894-வில்லியம் கென்னடி டிக்சன் அசையும் படத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★1927-அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து முதலாவது தொலைபேசிச் செய்தி நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் அனுப்பப்பட்டது.

★1935- முசோலினி மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பியேர் லாவல் ஆகியோர் பிரெஞ்சு-இத்தாலிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

★1942-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சின் பட்டான் குடா மீதான தாக்குதலை ஆரம்பித்தது.

★1950-அயோவா வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 41 பேர் உயிரிழந்தனர்.

★1953-அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமன் ஐக்கிய அமெரிக்கா ஐதரசன் குண்டைத் தயாரித்திருப்பதாக அறிவித்தார்.

★1959-பிடல் காஸ்ட்ரோவின் புதிய கியூபா அரசை அமெரிக்கா அங்கீகரித்தது.

★1968-நாசாவின் சேர்வயர் 7 விண்கலம் ஏவப்பட்டது.

★1979-வியட்நாமியப் படைகளிடம் கம்போடியாவின் தலைநகர் புனோம் பென் வீழ்ந்தது. பொல்பொட்டும் அவனது கெமர் ரூச் படைகளும் பின்வாங்கினர்.

★1984- புரூணை ஆசியான் அமைப்பில் 6 ஆவது உறுப்பு நாடாக இணைந்தது.

★1990-பீசாவின் சாய்ந்த கோபுரத்தின் உட்பகுதி பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்களின் பார்வைக்கு மூடப்பட்டது.

### பிறப்புக்கள்

★1502-பாப்பரசர் 13 ஆவது கிரெகரி (இ.1585)

★1925-தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்ப் பாணத்தின் சமூக சேவையாளர்(இ.2008)

★1941- ஜோன் வோக்கர், ஆங்கிலேய வேதியியலாளர்

★1948-இசிரோ மிசுகி, ஜப்பானியப் பாடகர்

### இறப்புக்கள்

★1943-நிக்கோலா தெஸ்லா, கண்டுபிடிப்பாளர் (பி.1856)


★1984-ஆல்பிரட் காஸ்லர், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (பி.1902)

★1998- விளாடிமிர் பிரெலொக், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (பி.1906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**இடமாற்றம் இனிய மாற்றம் தரும்! இனிமையாகப் பேசி எல்லோர் மனதிலும் இடம்பிடிக்கும் கன்னி இராசி நேயர்களே!**



புத்தாண்டு பிறக்கப்போகிறது. புதிய திருப்பங்கள் வரப்போகிறது. முத்தான வாழ்வில் முழுமதியை மறைத்த மேகங்களைப்போல எத்தனையோ துன்பங்கள் உங்களை ஆட்கொண்டிருக்கலாம். அத்தனை துயரங்களும் இனி விலகி அனைவரும் போற்றும் விதத்தில் இனி வாழ்க்கை அமையப் போகிறது.

அஷ்டமத்தில் கேதுவும், பத்தாமிடத்தில் அடியெடுத்து வைக்கப்போகும் குருவும் பதவி மாற்றம், ஊர் மாற்றம், இடமாற்றம் போன்றவற்றை வழங்கும் விதத்தில் கிரகநிலை இருக்கிறது.

வாக்கு ஸ்தானாதிபதியாக சுக்கிரன் உங்களுக்கு விளங்குவதால் கவர்ச்சியாகவும் கனிவாகவும் பேசக்கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு. பொறுமையை கடைப்பிடித்து பெருமையை காண்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள்.

விதத்தில் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக்கொண்டால் இலாபம் இருமடங்காக வந்து சேரும்.

வருடத்தொடக்கத்தில் புத- ஆதித்ய யோகம் செயற்படுவதால் கல்வி, கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் விருதுகள் பெறுவதோடு, வியக்கும் விதத்தில் வாய்ப்புகள் வந்துசேரும். மாமன் வழி ஆதரவோடு மகிழ்ச்சி காண்பர். அரசியல் பதவிகளில் இருப்பவர்களுக்கு அதிக பொறுப்புகள் வந்துசேரும்.

ஏழரைச்சனியின் ஆதிக்கமும் இருப்பதால் 2-வது சுற்று நடப்பவர்கள் எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பர். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும்.

சர்ப்ப தோஷத்தின் பிடியில் உங்கள் இராசி இந்த ஆண்டு அமைந்து இருக்கிறது. 2-இல் இராகு, 8-இல் கேது என்பதால் அதற்குரிய பரிகாரம் சர்ப்ப சாந்தியை முறையாக செய்ய வேண்டும்.

**01.01.2013 முதல் 27.05.2013 வரை**

இக்காலத்தில் உங்கள் இராசிக்கு குரு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார்.

அதுவும் தொடக்கதில் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். அதன்பார்வை உங்கள் இராசியின் மீது பதிகிறது. 4,7 இற்கு அதிபதியான குரு வக்ரம் பெற்று பார்க்கும்போது அக்கறை செலுத்தாத காரியங்களில்கூட ஆதாயம் கிடைக்கும். சிக்கனத்தை கடைப்பிடித்த நீங்கள் செலவுக்கும் அஞ்சமாட்டீர்கள்.

பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும். படிப்பில் இருந்த தடை அகலும். தக்க தருணத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவார்கள். தலைப் பிள்ளையின் திருமணத்தை ஜாம் ஜாம் என்று நடத்தி முடிப்பீர்கள். இலாப ஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரித்து ஆண்டு தொடங்குகிறது. எனவே, சென்ற ஆண்டு

வசதிகள் பெருகும்.

ஜென்ம சனியின் ஆதிக்கத்தில் எத்தனை சிக்கல்கள் இருந்ததோ அவை விலகத் தொடங்கும். நன்மைகளை வரவழைத்துக் கொடுக்க நண்பர்கள் முன் வருவார்கள். சென்ற ஆண்டில் பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

குரு சுக்ர பார்வையால் பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்தில் புதிய திருப்பங்கள் ஏற்படும். வாழ்க்கை துணை வழியே வரவு வந்து சேரும். தாயின் நலம் சீராகும். தந்தையின் உறவு திருப்திகரமாக இருக்கும்.

வாகன பழுதுகள் அதிகரிக்கின்றதே எனற கவலை இனி அகலும். சென்ற ஆண்டு நிறைய வாகன பழுதுகள் வந்திருக்கலாம். இந்த ஆண்டு இதை கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள். சில சந்தப்பங்களில் மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு தேவைப்படும். உத்தியோகத்தில் உயர்வு எதிர்பார்த்தபடி கிடைக்கும் என்றாலும் நீண்டதூரத்துக்கு மாற்றலாகி போகும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும்.

**28.05.2013 முதல் 31.12.2013 வரை**

குரு மிதுன இராசியில் சஞ்சரிக்கும் நேரமிது. அதன் பார்வை உங்கள் இராசிக்கு 2,4,6, ஆகிய இடங்களில் பதிவாகும் நேரமிது. எனவே, அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து புதிய திருப்பங்களை கொடுக்கப் போகிறது. குடும்பத்தைப் பொறுத்தவரை நீண்டகாலமாக இருந்த சண்டை, சச்சரவுகள் இப்போது மாறும். நிகழ்காலதேவைகளை பூர்த்தி செய்துகொள்ள எடுத்த ஒவ்வொரு முயற்சியும் வெற்றி தரும்.

குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவது யோகம்தான். விவாகதடை அகலும். விரிந்த மனம் பெற்றவர்களின் உறவு கிட்டும். கை கொடுத்து உதவ இதுவரை இருந்த உறவினர்கள் விரும்பி வந்துசேருவர். விருப்பங்கள் ஒவ்வொன்றும் நிறைவேறி திருப்பங்களை உருவாக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்ப சுமைகூடும். பொல்லாதவர்கள் என்ற பெயர் மாறும்.

4 ஆம் இடத்தை பார்க்கும் குருவால் நன்மைகள் ஏராளம் நடைபெறும். வேண்டிய அளவிற்கு நூதன பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். வீடு கட்டும் பணி தொடரும். வியக்கும் விதத்தில் சொத்து விற்பனையால் இலாபமும் கிடைக்கும் உத்தியோக ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் உத்தியோக உயர்வு ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

கிரகம் யோகம் செய்யும் நேரமே வக்ர இயக்க காலம்தான்.

எனவே, இடம் பூமியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். எளிதில் வெற்றி பெற நட்பு வட்டம் கைகொடுத்து உதவும். கல்யாண கனவுகள் நனவாகும். வெளிநாட்டு முயற்சிகளும் வெற்றி தரும். வீடு மாற்ற சிந்தனைகளும் படிப்படியாக நடைபெறும். வங்கி சேமிப்பு உயரும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் மேலும் உதவி செய்ய காத்திருப்பர்.

**சனி, செவ்வாய் பார்க்கும் காலம்!**

பார்க்கும் கிரகங்கள் பக்கபலமாக இருந்தால் வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டிக் கொண்டே இருக்கும். உங்கள் இராசியைப் பொறுத்தவரை வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படுகிற இடத்தில் சஞ்சரிக்கும் சனியை அல்லவா செவ்வாய் பார்க்கிறார்.

எனவே, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியுமா? என்பது சந்தேகம் தான். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

வீட்டு இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்வ்தன் மூலம் வேதனைகளும், சோதனைகளும்தான் வந்து சேரும். எனவே, விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது. பண நெருக்கடி அதிகரிக்கும். நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம்.

# புத்தாண்டு பலன்கள் 2013



**சிவல்புரி சிங்காரம்**

ஆண்டின் தொடக்கத்திலேயே தன ஸ்தானத்தில் இராகுவும் சனியும் சஞ்சரிக்கிறார்கள். எனவே, உங்களுக்கு வேண்டிய அளவு பணத்தை வாரி வழங்குவார். இருப்பினும் அஷ்டமத்தில் கேது அடியெடுத்து வைத்திருப்பதால் அதிகப்படியான செலவுகளை செய்ய நேரிடும்.

நீங்கள் மனதில் பதித்து வைத்துக் கொண்டு முன்னெச்சரிக்கையோடு செயற்பட வேண்டியநேரம், சனி, செவ்வாயின் பார்வை காலம்தான். குடும்ப ஸ்தானத்தில் இருக்கும் சனியை செவ்வாய் பார்க்கும்போது குடும்பத்தில் சில குழப்பங்கள் உருவாகலாம். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். இதுபோன்ற நேரங்களில் குடும்ப பெரியவர்களை கலந்தாலோசித்து செய்வது நன்மையைத் தரும்.

எந்த ஆண்டு புதிதாக பிறந்தாலும் பிறக்கும்போது அதற்கென்று ஒரு ஜாதகம் அமையும். அந்த ஆண்டின் தொடக்க நாள் ஜாதகத்தையும் நமது சுய ஜாதகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நமது இராசிக்கும் நமது லக்னத்துக்கும் புத்தாண்டில் உலா

## கன்னி



நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும்போது சனிக்கும் அங்காரகனுக்கும் பரிகாரம் செய்து எள்ளும் துவரையும் தானம் கொடுத்து வழிபட்டு வருவது நல்லது.

கன்னி இராசியில் பிறந்த உங்களுக்கு கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். என்றாலும் ஆரோக்கியத்துக்காக அதிக தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். காரணம், அஷ்டமத்தில் கேது, 2 இல் இராகு அல்லவா சஞ்சரிக்கிறார்கள். முறையாக சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வதால் தடைகள் அகலும். ஆண்டின் முற்பகுதியில் வரவு திருப்தி தரும். என்றாலும் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால்தான் ஆதாயங்களைப் பெற இயலும்.

உருகும் மெழுகுபோல் உங்கள் வாழ்க்கை அமையாமல் உரைத்து தேய்த்தால் மணக்கும் சந்தனம்போல் உங்கள் வாழ்க்கை மணம் பரப்ப மற்றவர்களிடம் அன்பு செலுத்துங்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் குழந்தைகளை பற்றிய கவலை அகலும். கல்யாண வாய்ப்புகள் கைகூடிவரும். சனி, செவ்வாய் காலத்தில் வாரம்தோறும் நவக்கிரக வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

# இவ்வாண்டில் புதிய திருப்பம் ஏற்பட்டு, முத்தான வாழ்க்கை அமையப் போகிறது

வரும் கிரகங்கள் எந்தெந்த இடத்துக்கெல்லாம் செல்கிறது. அதனால் என்ன விளைவுகள் ஏற்படப்போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டு செயற்பட்டால் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ள முடியும்.

எண்கணித அடிப்படையில் இந்த ஆண்டு சுக்கிரனுக்குரிய ஆண்டு என்பதால் உங்கள் இராசிநாதனான புதன் நட்புக் கிரகம்தான், எனவே, அதற்கேற்ற

ஸ்தம்பித்து நின்ற தொழில் இந்த ஆண்டு சிறப்பான நடைபெறும்.

மூடிய கதவுகள் திறக்கப்படும். முன்னேற்ற பாதைகள் வந்து சேரும். கோடீஸ்வரர் ஒருவரின் உதவியால் உங்கள் குடும்ப பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். தேடிய சொத்துக்களை விற்பதும், அதில் வரும் இலாபத்தைக் கொண்டு புதிய சொத்துக்கள் வாங்குவதும் வாடிக்கையாக போகும்.

உங்களுக்கு இடையூறாக இருந்த மேல் அதிகாரிகள் மாற்றப்படுவர். உங்கள் நலத்தை விரும்பும் அதிகாரிகள் மேல் அதிகாரிகளாக வந்து சேருவர். கடன்சுமை குறையும்.

**குருவின் வக்ர காலம்!**

குரு உங்கள் இராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். அதன் வக்ர காலம் உன்னதமான காலம். ஏனென்றால் கேந்திராதிபதி தோஷம் பெற்ற

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**


எண்ணியது நிறைவேற எப்போதும் கன்னி இராசிக்காரர்கள் விஷ்ணுவை வழிபட்டு வருவது நல்லது. புதன்கிழமை வழிபாட்டால் புண்ணியமும் சேரும். புகழும் கூடும். உங்களின் பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து அதற்குரிய கிரகத்தை அறிந்து தெய்வவழிபாடுகளை மேற்கொண்டால் திருப்தியான வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து எமது மக்களை பாதுகாப்போம்!

## வி. உருத்திரகுமாரன் உரை



(கொழும்பு)

உலகத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு குரல் எழுப்ப உலகில் தமிழர்களுக்கு என்று ஓர் அரசு இல்லை. உலகத் தமிழர்களாகிய நாம் மக்களாக ஒன்றிணைந்தே நமது மக்களின் பாதுகாப்பிற்கு குரல் கொடுக்க வேண்டிய வர்களாக உள்ளோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் இடம்பெற்று முடிந்த உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டின் இணைய வழி காணொளியூடாக உரையாற்றும் போதே பிரதமர் வி.உருத்திரகுமாரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகள் தாயகத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தமிழக அரசியல் பிரமுகர்கள் பங்கெடுத்திருந்த இந்த மாநாட்டில் மலேசியாவின் எதிர்க்கட்சி தலைவர் டத்தோஸ்ரீ அன்வர் இப்ராஹீம் உட்பட மலேசியாவின் பல தமிழர் அமைப்பு பிரதிநிதிகள் பங்கெடுத்திருந்தனர்.

இலங்கையில் நடந்த இனப்படுகொலையை ஆதரிக்க முடியாது. இலங்கையில் நடந்தது உள்நாட்டு விவகாரம் அல்ல. அது அனைத்துலக மனிதவுரிமை மீறல் என எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வர் இப்ராஹீம் கருத்து அமைந்திருந்தது.

இக் கலந்துரையாடல் நிகழ்விற்கு முன்பாக் உரை நிகழ்த்திய வழக்கறிஞர் கா. ஆறுமுகம் தமிழீழ விடுதலைப் புலிகளை உடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தைக் கொண்டு அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்து போர்க்குற்றங்களை புரிந்துள்ளது இலங்கை அரசு.

தமிழர்களாகிய எமது இலட்சியத்தை நிறைவேற்ற போராட வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உலகத் தமிழர்களாகிய நாம் இன்று கூடியுள்ளோம். அதற்கான புதிய உத்தியாகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மலர்ந்துள்ளது.

இந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான ஆதரவு தோழமை மையத்தை மலேசியாவில் உருவாக்கி அதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுத்துள்ளோம்.

இந்த ஆதரவு தோழமை மையம் மலேசியாவின் ஒவ்வொரு மாநிலங்களிலும் உருவாக்கப்பட்டு அதற்கான குழு அமைக்கப்படும் என அவர் கூறினார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதி மாணிக்கவாசகர் , 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அனைத்துலக சமூகத்துடன் தமிழர்கள் தரப்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த விடுதலைப் புலிகள் அமைப்பு முயற்சித்த போது தடை செய்யப்பட்ட இயக்கம் என அவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்ட பின்னரே ஜனநாயக ரீதியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தடை செய்யப்பட்ட அமைப்பு ஆயுததாரிகள் என எம்மை புறக்கணித்த அதே அனைத்துலகச் சமூகம் இன்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகளை பேசவருமாறு அழைக்கின்றது.

தமிழர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களுக்கென்று ஒரு நாடு இருந்தால் தான் பாதுகாப்பு, கௌரவம் என எல்லாமே இருக்கும்.

அந்த ஆயுதப் போராட்டம் பின்னடைவை எதிர்நோக்கினாலும் தமிழர்களுக்கெதிரான அடக்குமுறை இன்னும் தொடர்கதையாகி வருவதால் அப்பிரச்சினையை உலகளாவிய அளவில் ஓர் அரசியல் தளத்தில் நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள காரணத்தாலேயே நியூயோர்க்கை தலைமையகமாக கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் செயற்படத் தொடங்கியுள்ளதாக அவர் இதன்போது விபரித்தார். (அ-2)

## யானைத்தந்தம் வைத்திருந்த சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

இரு யானைத்தந்தங்கள் வைத்திருந்த சந்தேக நபர்கள் நால்வர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தேகம,பல்லேகுத்தாபன பிரேதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வத்தேகம பொலிசார் தெரிவித்தனர்.

இவர்கள் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிசார் தெரிவித்தனர். (அ-2)

## 7 பில்லியன் எதிர்பார்க்கும் வேலைவாய்ப்பு பணியகம்

(கொழும்பு)

வெளிநாட்டில் பணிபுரிபவர்களிடம் இருந்து 7பில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்பார்ப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அமைச்சின் செயலாளர் நிசங்க விஜயரட்ன தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் வெளிநாட்டில் பணிபுரிபவர்களிடம் இருந்து 6பில்லியன் டொலர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்று அவர் குறிப்பிட்டுள்ளார் .மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவில் தற்போது 1.8 மில்லியன் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்த தமது அமைச்சு முயன்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



நாடளாவிய ரீதியில் உலக சிறுவர் தினத்தையொட்டி மக்கள் வங்கியினால் நடத்தப்பட்ட சிசு உதான சிறுவர் சேமிப்புக் கணக்கு சீட்டிழுப்பில் வெற்றியைப் பெற்றுக் கொண்ட மாணவி ஒரு வருக்கு வவுனியாக் கிளை முகாமையாளர் கே.கோடீஸ்வரன் துவிச்சக்கர வண்டியினை கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

## அரசியல் நோக்கங்களுக்காக கல்வித்துறையில் மாற்றம்

### பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர்

(கொழும்பு)

அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக நாட்டின் கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்படுவதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பிலான சர்ச்சை குறித்து கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஓர் இன சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அதிகளவில் சட்டக் கல்லூரிக்கு தெரிவானமையின் மூலம் அமைச்சர்கள் எவ்வாறு பரீட்சைகளில் தாக்கம் செலுத்துகின்றனர் என்பது புலனாகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பரீட்சை முறைமையின் மீதான திட்டமிட்ட தலையீடாகவே இதனைக் கருத வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் போட்டோ கொப்பி இயந்திரம் இல்லை

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு செல்லும் மக்கள் தாம் கொண்டு செல்லும் ஆவணங்களை போட்டோ பிரதி செய்வதற்கு கூடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

பலதேவைகளின் நிமிர்த்தம் பிரதேச செயலகத்திற்கு செல்லுகின்ற மக்கள் கேட்கப்படுகின்ற ஆவணங்களை போட்டோ பிரதி செய்வதற்காக இரண்டு அல்லது மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்கு சென்று புதுக்குடியிருப்பு சந்தியில் தமது ஆவணங்களை போட்டோ பிரதி எடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் முதியவர்கள் பல சிரமங்களின் மத்தியிலேயே தமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதை அவதானிக்க முடிகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்நிலையைக் கருத்திற்கொண்டு இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என இம்மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (அ-[illegible])

## குற்றவியல் பிரேரணைக்கு எதிராக புலம்பெயர் புலியாம்

### அமைச்சர் மேர்வின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணைக்கு எதிராக புலம்பெயர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தொடர்பு மற்றும் பொது மக்கள் விவகார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யுத்தத்தின்போது வெற்றி கொள்ள முடியாதவற்றை வென்றெடுக்க அவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

[illegible] பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை அவர் பிரதம நீதியரசராக பதவி வகிக்கும் போது அவரால் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்கத்திற்கு முரணான நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

குற்றவியல் பிரேரணைக்கு எதிரான சக்தி ஒன்று காணப்படுகிறது. இதன் பின்னணியில் அரசாங்கத்திற்கு எதிராக சக்தியே உள்ளதென மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நிதி வழங்குகிறார்கள் என அவர் கூறினார்.

கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ள பிரதம நீதியரசர் தொடர்ந்தும் அந்த பதவியை வகிப்பது பொருத்தமற்றதாகும் என மேர்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் காற்றினால் வீடுகள் சேதம்

நுவரெலியா, ஹல்தும்முல்ல மற்றும் ஹப்புத்தளை ஆகிய பகுதிகளில் கடும் காற்று வீசியுள்ளது.

நுவரெலியா பிரதேசத்தில் வீசிய கடும் காற்றினால் சுமார் 30 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்டச் செயலாளர் டீ.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார். நுவரெலியா கம்பளை வீதியில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீசிய கடும் காற்றினால் வீடுகள் சிலவற்றிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதுளை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஈ.எல்.எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கடும் காற்றினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்காக பொலிஸ், இராணுவத்தினர் ஆகியோரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ-2)

# தனியார் பேருந்து தரிப்பிடத்தை புனரமைப்பு செய்ய நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் புல்லுக்குளத்திற்கு அருகிலுள்ள வெளி மாவட்டங்களுக்கான தனியார் பேருந்து தரிப்பிடத்தை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த பேருந்து தரிப்பிடத்தை புனரமைப்பு செய்வதற்கான திட்டம் மற்றும் அதற்கு தேவைப்படும் நிதியின் அளவு பற்றி யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் யாழ். மாநகர சபையிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

பேருந்து தரிப்பிடத்தை புனரமைப்பு செய்வதற்கான திட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு யாழ்.அரச அதிபரிடம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக வெளி மாவட்டங்களுக்கான பேருந்து தரிப்பிடம் மிகவும் மோசமாக பாதிப்படைந்து சேறும் சகதியுமாக காட்சியளிப்பதோடு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறித்த பேருந்து தரிப்பிடம் நிரந்தரமாக புனரமைப்பு செய்யப்படுவதற்கு முன்பாக தற்காலிகமாக புரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் மழை காலங்களில் பாதிப்படையாதவாறு குறித்த பேருந்து நிலைய வளாகம் தார் இடப்பட்டு புனரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு நிலைய வளாகத்தினுள் பயணிகள் தரித்து நிற்பதற்கு கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான செலவீனங்களை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பொறுப்பேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


வெளிமாவட்டங்களுக்கான தனியார் பேருந்து தரிப்பிடம் இடநெருக்கடிகளுக்கு மத்தியில் யாழ்.பிரதான பேருந்து தரிப்பிடத்திற்கு பின்புறமாகவுள்ள சிறுவீதியில் உள்ள வெற்றுக்காணியில் நீண்டகாலமாக இயங்கி வந்தது.

இதனை வேறு இடத்திற்கு மாற்றி போக்குவரத்தை இலகுபடுத்துமாறு கோரிக்கை விடப்பட்டதையடுத்து புல்லுக்குளத்திற்கு அருகில் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் காலநிலை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மேற்படி பேருந்து தரிப்பிடம் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய தேவை தொடர்பில் யாழ்.மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட தனியார் பேருந்து கம்பனிகளின் இணையத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மாநகர சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பன இணைந்து யாழ்.அரச அதிபரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ்.அரச அதிபர் குறித்த பேருந்து தரிப்பிடத்ததை புனரமைப்பு செய்வதற்கான உத்தேச மதிப்பீட்டினை கணிப்பிட்டு தருமாறு மாநகர சபையிடம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# யாழ்.கோட்டை பகுதியில் தொடரும் சீரழிவுகள்

### விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை பகுதியில் கலாசார சீரழிவு இடம்பெறுவதாக தொல்லியல் பாதுகாவலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். நீண்டகால வரலாற்றினை கொண்டதும் தமிழர்களின் மனங்களில் இடம்பிடித்ததுமான யாழ்.கோட்டையில் தற்போது கலாசாரத்திற்கு புரள்வான பல சம்பவங்கள் அரங்கேறுகின்றன.

இவ்வாறான சம்பவங்களினால் கோட்டையினை பார்வையிட வருகின்ற சுற்றுலாப்பயணிகளும் குடும்பங்களும் முகத்தினை சுழித்து கொண்டு வெளியேறி விடுகின்றனர். கைகளில் கொப்பிகளுடன் தனியாக வரும் பெண்கள் வரலாற்றுப்புகழ்மிக்க கோட்டையின் மறைவிடங்களில் பல்வேறு லீலைகளில் ஈடுபடுகின்றனர். மாலை 6 மணிக்கு பின்னரும் கூட இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. கோட்டையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சீரழிவுகள் தொடர்பில் பத்திரிகைகளும் பலமுறை சுட்டிக்காட்டியிருந்ததோடு இணையத்தளங்களும் பல வீடியோக்கள் மூலம் சுட்டிக்காட்டியிருந்தன.

எனினும் அதற்கு பொலிஸார் உட்பட இதுவரை யாரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு வரலாற்று பொக்கிசத்திற்குள் இன்னொரு வரலாறு அழிவதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இதற்கு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் தொல்லியல் பாதுகாவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)

# குற்றப்பிரேரணை குறித்து ஐ.நாவுக்கு பதிலளிப்பு

### விளக்கி கடிதம் எழுதினார் பீரிஸ்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் ஐ.நாவின் கருத்துக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்துள்ளது.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் கெப்பிரியல்லா கனூல்,இலங்கையின் சட்டத்துறை மீறல்கள் குறித்து கண்டனம் வெளியிட்டிருந்தார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல் பீரிசினால் இதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட குற்றவியல் பிரேரணை தேசிய ரீதியாக நடைமுறையிலுள்ள பிழையற்ற செயற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படியான தருணங்களில் அதிகாரம் கொண்டுசட்ட ஒழுங்குகளுக்கு இந்த பிரேரணை உட்பட்டிருப்பதாகவும்அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஜப்பான் யுத்தக்கப்பல்கள் கொழும்பை வந்தடைந்தன

(கொழும்பு)

ஜப்பானின் கடற்படையினருக்கு சொந்தமான இரண்டு யுத்த கப்பல்கள் கொழும்பு துறைமுகம் வந்தடைந்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நல்லெண்ண அடிப்படையில் இந்தக் கப்பல்கள் இரண்டும் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ளன. இவை இரண்டும் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ளன.


சுசுனாமி மற்றும் கிரிசேமி ஆகிய இந்த இரண்டு கப்பல்களுமே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இந்த இரண்டு கப்பல்களும் ஜப்பான் கடற்படையினரிடம் உள்ள அதிநவீன கப்பல்கள் என தெரிவிக்கப்படுகிறது.

151 மீற்றர் நீளமான இரண்டு யுத்த கப்பல்களில் சுசுனாமி என்ற கப்பல் 4 ஆயிரத்து 650 தொன் நிறைகொண்டது. கிரிசேமி 4 ஆயிரத்து 550 தொன் நிறை கொண்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# உலக நாடுகளை சமாளிக்கும் சாதுரியம் இலங்கைக்கு இல்லை

### பிரான்ஸிற்கான இலங்கை தூதுவர்

(கொழும்பு)



உலக நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் விவகாரத்தில் இலங்கைக்கு போதியளவு சாதுரியம் கிடையாது என பிரான்ஸ் நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் உலக நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் விவகாரத்தில் இலங்கை வெற்றியை அடைவதில்லை. அத்துடன் இவர்களுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள புலம்பெயர் இளைஞர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பரஸ்பர புரிந்துணர்வுடன் இந்த சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாகன விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

நிவித்திகல- பிங்கந்த பகுதியில் முச்சக்கரவண்டியொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

காயமடைந்தவர்களில் இரு பெண்களும் ஆணொருவரும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் நிவித்திகல பகுதியைச் சேர்ந்த இரு பெண்களே உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனவர்களை தேடி கண்டுபிடிக்க ஜப்பான் நிதியுதவி


ஜப்பான அரசாங்கம் யுனிசெப் உடன் இணைந்து காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டு பிடித்தல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் தேவையானோருக்கு மனவள மற்றும் சமூக ரீதியான ஆதாரங்களை வழங்குவதற்கும் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்கும் ஜப்பானிய அரசாங்கம் 4 இலட்சத்து 45 ஆயிரம் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது ஜப்பானிய தூதுவர் நொபிகிட்டோ கோபோ, யுனிசெப் இன் இலங்கைக்கான பிரதிநிதி ஜனாபட றேசா கொசெல்னி மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் பங்கேற்ற ஜப்பானிய தூதுவர் கோபோ உரையாற்றுகையில்,

பாதிப்புற்று இருக்கும் குடும்பத்தினர் காணாமல் போனவர்களை தேடவும் கண்டுபிடிக்கப்பட்டவர்களை உரியவர்களுடன் இணைப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு தேவையான உதவிகளை கோர முடியும்.

இதேவேளை இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி ஜனாப் றேசா கொசெல்னி கூறுகையில், காணாமல் போன சிறுவர்களை கண்டுபிடிக்க முயற்சி செய்யும் ஸ்தாபனங்களைப் பற்றி அறிந்து அவர்களை நாடுவதற்கு உரிய பகுதியினருக்கு ஜப்பானிய அரசின் இந்த உதவி பேருதவியாக அமையும். அத்துடன் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் மனோநிலையைப் பேணுவதற்கும் அவர்களுடைய



வாழ்க்கையை கொண்டு செல்வதற்கும் இது ஆதாரமாக விளங்கும் என்றும் கூறினார்.

FTRU என சுருக்கமாக அழைக்கப்படும் சண்டையின் மத்தியில் காணாமல் போன சிறுவர்களை தேடிக்கண்டு பிடித்து பெற்றோருடன் அவர்களை இணைக்கும் பணியை ஆற்றும் இந்த நிறுவனமானது 2009ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்திற்கு இற்றைவரை 2ஆயிரத்து 431 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் 745 விண்ணப்பங்கள் சிறுவர்கள் சம்பந்தப்பட்டவையாகும்.

இற்றைவரை அடையாளம் காணப்பட்ட 148 சிறுவர்களின் விபரங்கள் நன்னடத்தைத் திணைக்களத்தினருக்கு இவர்களுடைய பெற்றோர்களை அடையாளம் கண்டு தேடுவதற்கும் பின்னர் இப்பிள்ளைகளை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கும் பொறுப்பளிக்கப்பட்டிருக்கின்றன. வயதுப் பரம்பலை நோக்கும் போது மேற்கூறப்பட்ட சிறுவர்கள் அநேகமாக 16 வயது தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்டவர்களாக காணப்பட்டுள்ளனர்.

FTRU எனப்படும் இந்த ஸ்தாபனத்தின் நிதி வசதிகள் பின்வரும் சேவைகளுக்கு பயன்படுகின்றன. அதாவது தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல், காணாமல் போன சிறுவர்களை தேடிக்கண்டு பிடித்தல், அவர்களுடைய பெற்றோரையும் சொந்தக்காரர்களையும் ஆதரித்தல். காணாமல் போன சிறுவர்களை கண்டுபிடிப்பதில் கூடுதல்அக்கறையையும் நாட்டத்தையும் சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்துவதற்குரிய உந்து சக்தியை அளி த்தல், சமுதாயத்தில் வாழும் மக்கள் மத்தியில் இவ்விடயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்ப டுத்தல், இதன் பயனாக சிறுவர்களை தேடுவ தற்கு உதவி புரிதல் மற்றும் சம்பந்தப்பட்ட குடும்பத்தினருக்கு மனவள சமூக ரீதியான ஆதாரங்களை வழங்குதல் ஆகும்.

இந்த செயற்திட்டமானது ஏற்கனவே நிலவும் நடை முறைகளின்படி நன்னடத்தை மற்றும் யுனி செப் பங்களிப்பாளர்களுடைய ஒத்திசைவு டன் அமுல் செய்யப்படும்.

ஜப்பானிய அரசாங்கமானது தொடர்ந்து இலங்கையின் அபிவிருத்திக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்கும் தனது பங்களிப்பையும் ஆதரவையும் வழங்கிக் கொண்டிருக்கும் என்றார். (அ-2)

# தமிழக மீனவர் அத்துமீறலை கண்டித்து வடக்கு மீனவர்கள் பேரணி நடத்துவர்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் தமிழக கரையோர மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளைக் கண்டித்தும் அவற்றை கட்டுப்படுத் துமாறும் வேண்டுகோள் விடுத் தும் வடக்கு மீனவர்கள் மாபெரும் கண்டனப் பேரணியொன்றினை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இந்தப் பேரணியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களும் பங்கு கொள்வார்கள் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார். இந்திய ரோலர் படகுகளினால் இலங்கையின் வடபகுதி கடற்பரப்பில் உள்ள கடல் வளங்கள் அழிக்கப்படுவதோடு மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுவருகின்றது.

பல இலட்சம் ரூபா. பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் சேதமாக்கப்படுவதனால் வடபகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி வருகின்றனர்.

அத்தோடு கடன் சுமையுடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்த போராடி வருகின்றனர்.

ஆனால் இந்தியாவின் தமிழக கரையோர மீனவர்கள் தமது நாட்டு கடல் வளத்தை அழித்தது போன்று இலங்கையின் வடபகுதி கடல் வளத்தையும் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி நடைமுறைகளைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு மீனவர்களையும் தாக்கிவிட்டு உபகரணங்களையும் சேதமாக்கி செல்கின்றனர்.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கமும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை.

இரண்டு நாட்டு மீனவர்களும் கலந்துரையாடி பொது உடன்பாட்டுக்கு வரும் போது தான் இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

இருப்பினும் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எந்தவிதமான ஏற்பாடுகளையும் இரண்டு நாடுகளும் மேற்கொள்ளவில்லை.

இதுதவிர தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலும் வடபகுதி கடற்பரப்பில் அதிகரித்து காணப்படுவதோடு தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளில் அவர்களும் ஈடுபடுவதனால் வடபகுதி கடல் வளம் அழிக்கப்படுகின்றது.

மேலும் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தும் வரையிலும் தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதியில் மேற்கொண்டு வரும் தடை செய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளை கைவிடும் வரையிலும் வடபகுதியில் உள்ள ரோலர் படகுகளைக் கட்டுப்படுத்த முடியாது.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 150 இற்கும் மேற்பட்ட ரோலர் படகுகள் தற்போது தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களம் மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் என்பன முயன்று வருகின்றபோதும் அது சாத்தியப்படவில்லை.

இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தாமல் உள்ளூர் மீனவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. இது இவ்வாறு சென்று கொண்டிருந்தால் இந்தியாவின் தமிழகக் கரையோர கடற்பகுதியின் வளங்கள் எவ்வாறு முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு மீன் வளம் அற்ற கடற்பகுதியாகவுள்ளதோ அதேபோன்று இலங்கையின் வடபகுதி கடற்பரப்பும் மாற்றப்படும். இவ்வாறான சம்பவங்களை கண்டித்தே மாபெரும் கண்டனப் பேரணியொன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

வடபகுதியில் இவ்வாறான பல போராட்டங்கள் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பலரிடமும் இது தொடர்பில் மகஜர்களும் கையளிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. கடந்த வருடம் பிற்பகுதியிலும் யாழ். மாவட்டத்தில் மாபெரும் கண்டனப் பேரணியொன்றை யாழ். மாவட்ட மீனவர்கள் நடத்தியிருந்தபோது யாழ். இந்தியத் துணைத்தூதுவரிடமும் மகஜரும் கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சட்டக் கல்லூரி நுழைவு தேர்வில் பலம் பொருந்திய முறைகேடு

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த 2012 ஆம் ஆண்டுக்கான இலங்கை சட்டக்கல்லூரியின் நுழைவு தேர்வு பரீட்சையில் பலம்பொருந்திய முறைகேடுகள் இடம் பெற்றமைக்கான சாத்தியங்களை ஒப்பு வித்து காட்ட முடியும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சட்டக்கல்லூரியின் நுழைவுத்தேர்வு பரீட்சை தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்

அவர் தொடர்ந்து கூறுகையில், சட்டக் கல்லூரிக்கான நுழைவுத் தேர்வு பரீட்சையில் பலம் பொருந்திய அநீதி ஏற்பட்டுள்ளது. தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் தோற்றியவர்கள் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதனை ஆராய்ந்து பார்க்கும்போது பாரதூரமான பிரச்சினை இந்த இடத்தில் இருப்பது எனக்கு புலப்படுகிறது.

பரீட்சையின் புள்ளிகள் நியாயமாக வழங்கப்பட்டது என எவராவது கூறுவார்களேயானால் அது முற்றிலும் பொய்யானது. இதனை ஒப்புவித்து காட்ட முடியும்.

பரீட்சைத்தாள் வெளியானதா இல்லையா என்பது குறித்து புலனாய்வு பிரிவினருக்கு உறுதிப்படுத்த முடியுமா? முடியாதா? என்ற போதிலும் இதனை எங்களால் தெளிவாக ஒப்புவித்து காட்ட முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் ரவூப்ஹக்கீம் நீதியமைச்சராக பதவி வகிக்காத 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் 7 முதல் 8 முஸ்லிம் மாணவர்கள் நுழைவு தேர்வில் தேர்ச்சி பெற்றனர்.எனினும் ஹக்கீம் நீதியமைச்சராக பதவி வகிக்கும் 2011 ஆம் ஆண்டு 51 முஸ்லிம் மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு 78 முஸ்லிம் மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழர் பிரச்சினையில் அமெரிக்க நிலைப்பாடு, தொடரும் வினாக்குறி!

அமெரிக்கத் தூதர் ஹெறி இலங்கை அரசின்மீது இறுக்கமான நிலைப்பாட்டை கடைப்பிடிக்க மாட்டார் என்றவாறான அபிப்பிராயம் அரச சார்பு கருத்துருவாக்கப் பிரிவினர் மத்தியில் காணப்படுவதாக தெரிகிறது...

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தம் 2009 மே 19 இல் முடிவுக்குக் வந்தது. இலங்கை அரசின் உத்தியோக பூர்வாமான வெற்றி அறிவிப்பைத் தொடர்ந்து, இலங்கை முற்றிலும் புதியதொரு சூழலுக்குள் பிரவேசித்திருந்தது. இத்தகையதொரு பின்புலத்தில் 2009 டிசம்பர் 7 இல் அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக்குழு இலங்கை யுத்தத்திற்குப் பின்னரான அமெரிக்க மூலோபாயத்தை மீள்சட்டகப்படுத்தல் என்னும் தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. மேற்கிறது.

மூலோபாய முக்கியத்துவத்தை பொறுத்தவரையில் அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் இப்பிராந்தியத்தில் ஒரு பெரிய விளையாட்டில் களமிறங்கியிருக்கின்றன. மேற்படி மூன்று நாடுகளும் கடல்வழி வர்த்தகத்திலும் ஆர்வங்களை பகிர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் அமெரிக்கா, இலங்கையின் மீதும் கவனம் கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையின் மூலோபாய முக்கியத்துவம் என்பது இறுதியில் அமெரிக்க ஆர்வங்கள் நிராகரிக்கப்படுவதாக அமைந்துவிடக் கூடாது. இவற்றை கருத்தில் கொண்டு புதிய பொருளாதார அரசியல் யதார்த்தங்களுக்கு ஏற்ப இலங்கையுடனான உறவுகளை அமெரிக்கா, ஒரு மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும். மனிதநேய விடயங்கள் முக்கியமாக மறைமுக எச்சரிக்கை ஒன்றையும் வெளிப்படுத்தியிருக்கின்றது அதாவது இலங்கை தொடர்பான விடயங்களில் மேற்குலகு உறுதியாக விலகிச் செல்லுமாயின், அந்த இடைவெளியை பாரம்பரியமற்ற கொடையாளர்கள் பயன்படுத்திக் கொள்வர். இங்கு பாரம்பரியமற்ற கொடையாளர் என்று சீனாவையே மேற்படி வெளிவிவகாரக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. இலங்கை சீனாவுடன் நெருங்கிச் செல்வது நீண்டகால நோக்கில் மேற்குலக- குறிப்பாக அமெரிக்க மூலோபாய நலன்களுக்கு உகந்ததல்ல என்னும் கருத்து மேற்படி அறிக்கையில் மேலோங்கியிருக்கிறது. இந்த அறிக்கைக்கும் ஜோன் ஹெறி இலங்கை விடயத்தில் இறுக்கம் காட்டமாட்டார் என்னும் கருத்திற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே கொழும்பின் மாற்றங்களை வெளிப்படுத்தப் போவ தில்லை என்றே அமெரிக்க அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். இது பற்றி இரஷ்ய நெட் இணையத்தள கட்டுரையொன்று, ஜோன் ஹெறி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விடயங்களில் உறுதியான நிலைப்பாடுடையவர் என்று பதிவிட்டிருக்கின்றது. ஜோன் ஹெறி மத்திய ஆசியாவில் மனித உரிமை மற்றும் ஜனநாயக விடயங்களில் தடம் பதித்த ஒருவர் என்று குறிப்பிட்டிருக்கும் கட்டுரையாளர், அதற்கு உதாரணமாக மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானின் ஜனநாயக முன்னேற்றத்தில் அவர் எடுத்துக் கொண்ட ஈடுபாட்டையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். 2010 இல் கிர்கிஸ்தான் நிலைமைகள் தொடர்பாக ஒபாமா நிர்வாகத்திற்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்- ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான விவாதம் என்பது பூச்சியங்களை கூட்டும் ஒரு விளையாட்டல்ல. எனவே, இத்தகைய சிந்தனைப்போக்குள்ள ஒருவர் இலங்கையின் மனித உரிமையாளர்சார் விடயங்களை எவ்வாறு நேர்க்குவார் என்பதை பொறுத்திருந்தே நோக்கவேண்டியிருக்கிறது. அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையை தீர்மானிப்பதில், அமெரிக்க வெளிவிவகாரச் செயலருக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. ஆயினும் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் மட்டுமே அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையை தீர்மானிப்பதில்லை. அது மிகவும் பரந்த அடிப்படையைக் கொண்டிருக்கிறது. வெளிவிவகாரச் செயலர், பாதுகாப்பு செயலர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் அமெரிக்க மத்திய புலனாய்வுப் புணியகத்தின் பணிப்பாளர் ஆகியோரால் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு ஏற்பவே அமெரிக்க அதிபர் வெளிவிவகார முடிவுகளை எடுப்பார். எனவே இலங்கை தொடர்பான அமெரிக்க அணுகுமுறை இத்தகையதொரு கூட்டு அறிவுரையின் கீழ்தான் எடுக்கப்பட்டிருக்கும்.







படி அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கும் முக்கியமான விடயம்- அமெரிக்கா இலங்கையை இழந்துவிட முடியாது என்பதாகும். இவ்வாறு குறிப்பிடும் மேற்படி அறிக்கையானது- இதன் அர்த்தம், விடயங்களை ஓர் இரவில் மாற்றிவிட முடியும் என்பதோ அல்லது இலங்கையின் அரசியல் மற்றும் மனிதாபிமான விடயங்களை நிராகரித்துவிடுவது என்பதோ அல்ல என்றும் சுட்டிக் காட்டியிருக்கின்றது. மேற்படி விபரிப்பின் அடிப்படையில் இவ்வறிக்கையானது அமெரிக்காவின் சில மூலோபாய நலன்களை அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கிறது. மேற்படி அறிக்கையின் சில பகுதிகள் மேலதிக தகவல்களுக்காக இங்கு தரப்படுகிறது.

இலங்கையின் புவிசார் அரசியல் முக்கியவத்துவமானது, கருத்தில் கொள்ளத்தக்க வகையில் வளர்ச்சியடைந்து செல்கிறது. இந்த நிலைமையில் மேற்குலக நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் யுத்தம் தொடர்பான விடயங்கள் மீதான விமர்சனங்களை அதிகரித்துச் சென்றால் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் சீனா, பர்மா, ஈரான் மற்றும் லிபியா போன்ற நாடுகளுடன் உற்வுகளை வலுப்படுத்திக் கொள்ளும். இது இலங்கை விடயங்கள் மேற்குலகு அல்லாத நாடுகளின் செல்வாக்கிற்கு ஆட்பட்டுவிடக்கூடிய நிலைமையை தோற்றுவிக்கலாம். இந்த நிலைமையானது இறுதியில் இப்பிராந்தியத்தின் மீது அமெரிக்கா கொண்டுள்ள ஈடுபாட்டை பாதிக்கக் கூடும். எனவே, இலங்கையின் புவிசார் மூலோபாய முக்கியத்துவத்தை அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் குறைத்து மதிப்பிடக்கூடாது. இவ்வாறு எச்சரித்திருக்கும் மேற்படி வெளிவிவகார குழுவின் அறிக்கையானது அதற்கான காரணமாக பின் வருவனவற்றை சுட்டிக்காட்டியிருக்கின்ற அதேவேளை, இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கொள்கை முன்னெடுப்பு, ஒரு தனி விடயத்தை முக்கியப்படுத்துவதாக இருக்கக் கூடாது. அவ்வாறு இடம்பெறுமிடத்து, அது உண்மையான மறுசீரமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தாது. அத்துடன் அது இப்பிராந்தியத்தின்மீது அமெரிக்காவிற்குள்ள புவிசார் மூலோபாய ஈடுபாடுகளில் குறுகியகால தாக்கங்களையே விளைவிக்கும்.

இந்த அறிக்கையின் சாராம்சத்தை உற்று நோக்கினால் யுத்தத்திற்கு பின்னரான இலங்கை நிலைமைகளில் அமெரிக்கா ஒரு நிதானமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலுயுறுத்துவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாக் காணலாம். இலங்கையை தனிமைப்படுத்தாமல் அமெரிக்காவின் புவிசார் அரசியல் மூலோபாய ஆர்வங்களை கருத்தில் கொண்டு இலங்கையை கையாளுவது சவால் நிறைந்த ஒன்று. எனவே, அதனை மிகவும் நிதானத்துடனேயே அமெரிக்கா அணுகவேண்டும் என்பதையே இவ்வறிக்கை [illegible] முற்பட்டிரு[illegible]. இவ்வறிக்கையின் ஊடாக மேற்படி வெளிவிவகாரக்குழு சில கருத்துருவாக்க பிரிவினர், மேலே குறிப்பிடப்பட்டவாறான அபிப்பிராயத்திற்கு வந்தடைந்திருக்கின்றனர். ஏனெனில், இந்த அறிக்கையை, வெளியிட்ட மேற்படி அமெரிக்க செனட்டின் வெளிவிவகார குழுவின் தலைவராக இருந்தவ்ரே, தற்போது வெளிவிவகார செயலர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் ஜோன் ஹெறி. அத்துடன் வெளிவிவகாரக் குழுவில் குடியரசுக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினரான ரிச்சாட், லுகர் ஆகிய இருவரும் இணைந்து மேற்படி அறிக்கையை வெளியிட்டிருந் தனர். எனவே, இலங்கை விடயங்களில் அமெரிக்கா இலங்கையை தனிமைப் படுத்தாதவாறான அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் நிலைப்பாட்டைக் கொண்ட ஹெறி, தற்போது வெளிவிவகாரச் செயலராக நியமிக்கப்பட்டிருப்பதை கொழும்பின் ஆளும் பிரிவினர் தங்களுக்கு சாதகமான ஒன்றாக பார்ப்பது இயல்பான ஒன்றே.

ஆனால், ஒபாமாவின் முதல் தவ[illegible] மேற்கொள்ளப்பட்ட கொள்[illegible] தீர்மானங்களிலிருந்து ஜோன் ஹெறியின் முடிவுகள் பெரியளவ்வில்

எனவே, இலங்கையின் மனித உரிமைசார் முன்னேற்றங்கள் தொடர்பில் அமெரிக்க கரிசனையில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவே. ஆனால், அது கூட்டமைப்பினர் மாகாணசபை தேர்தல் மேடைகளில், வாக்கு சேகரிக்கும் நோக்கில் பிரச்சாரம் செய்ததுபோன்று பாரதூரமானது அல்ல. பாரிய அளவில் சிங்கள மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கும் தற்போதைய ஆட்சியை புறம் தள்ளிவிட்டு தமிழரின் பிரச்சினையை அமெரிக்கா கையில் எடுக்கும் என்பது ஒரு ஏற்புடையதாகக் க்ருதக்கூடியதல்ல.

-யதீந்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவிதமான எண்ணங்களை மேற்கொள்வது தான் பலவீனத்திற்கு காரணமாக அமைகிறது. - ரவீந்திரநாத் தாகூர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட்டுக்கோட்டையில் ஆசிரியர் இடமாற்ற மாநாடு பிரமதேவர் தலைமையிலான குழு கண்காணிப்பு

வடமாகாணத்தில் கல்வி அதிகாரிகளுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் எந்தவிடயத்தையும் ஏக்கத்துடன் அனுகுகின்ற நிலைமை இருப்பதன் காரணமாகவே வன்னிக்கான ஆசிரிய இடமாற்றம் இந்தளவு தூரம் சீரழிகிறது என்று சித்திரகுப்தன் கூற, இதற்கு என்னதான் செய்யலாம் என்று பிரம்மா கேட்க, அந்த நேரத்தில் நந்திதேவர் அவசரமாக ஓடி வருகிறார்.

நந்தி : சுவாமி! இடைச்செருகலுக்கு மன்னிக்கவும்.

பிரம்மா : ஆசிரியர் இடமாற்றத்தில் இடைச் செருகல்கள் இருப்பதன் காரணமாகத்தானே வட்டுக்கோட்டை மாநாடு நடக்கிறது. விடயத்தை சுருக்க மாகக் கூறு.

நந்தி : சுவாமி! வன்னிக்கான ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பில், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எனக் கூறி 51 பேர் கையொப்பம் இட்டு கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக்கடிதத்தை தங்கள் தலைமையிலான கண்காணிப்புக்குழுவில், சேர்த்துக்கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

பிரம்மா : நந்திதேவரே! கடிதத்தை வாசியுங்கள்.

நந்தி : கௌரவ பிரமதேவர், தலைவர், கண்காணிப்புக்குழு, வன்னிக்கான ஆசிரியர் இடமாற்ற மாநாட்டுச்சபை, வட்டுக்கோட்டை.

பெருந்தகையீர், நேற்றையதினம் சித்திரகுப்த னார் வாசித்த பட்டோலையில், அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லாததன் காரணமாகவே வன் னிக்கான ஆசிரியர் இடமாற்றம் சின்னாபின்னப் படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம் வழங்கும் போது ஒரு பொது ஒழுங்கில் இடமாற்றம் வழங்கப்படவில்லை.

ஏழுவருடங்கள் கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றிய ஒரு ஆசிரியரை வன்னிக்குப் போ! என்று சொல்லி இடமாற்றம் கொடுத்த போது அதிகாரிகள் தவறு விடவில்லை என்று சித்திரகுப்தனார் கருதுகின்றாரா?

கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களை வன்னிக்கு இடமாற்றம் செய்வதற்குள் அதிகாரிகள் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்பதும் குறித்த ஆசிரியர்களின் கோவைகளுக்கு பொறுப்பான முகாமைத்துவ உதவியாளர்கள் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை என்பதும் உண்மை யென்று தெரிகிறது அல்லவா?

வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றத்தில், மிகவும் நிதானமாகச் செயற்பட்டிருந்தால், இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகள் என்ற பேச்சுக்கு இடம் இருந்திருக்காது. நியாயமான காரணங்களோடு மேன்முறையீடு செய்கின்ற போது மற்றவர்களும் தலையிடவே செய்வர்.

இதுமட்டுமல்ல ; வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம் கிடைக்கப்பெற்ற சில ஆசிரியர்கள், தமது உச்ச செல்வாக்கைப் பயன்படுத்தி மருத்துவச் சான்றிதழ்களை ஒப்புவித்து இடமாற்றத்திலிருந்து தப்பித்துக் கொண்டனர். இது எந்தவகையில் நியாயமாகும்?

எங்கள் கல்வி அதிகாரிகளுக்கு பூரணமான அதிகாரம் வழங்கப்படுவதன் மூலமே எங்கள் கல்வியை உயர்த்த முடியும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அதேநேரம் அதிகாரிகளும் பக்க சார்பற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் உங்களின் கவனத்திற்கு தருகின்றோம்.

நந்தி தேவர் கடிதத்தை வாசித்து முடித்ததும் பிரமதேவர் சித்திரகுப்தனை பார்க்க,

சித்திர குப்தர் கடும் கோபத்துடன் தான் வைத்திருந்த பட்டோலையை கவக்கெனத் தூக்கி வாசித்தார்.

(நாளை தொடரும்)

# அம்பாள்குள கிராம வீதிகள் புனரமைக்கப்படவில்லை

## மக்கள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தின் வீதிகள் மீள் குடியேற்றத்தின் பின்னர் இதுவரை எவ்வித புனரமைப்பும் செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான சந்தை, கிளி/விவேகானந்தா பாடசாலை என்பன அமைந்துள்ளதுடன் சுமார் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அத்துடன் இவ்வீதிகளினூடாக தினமும் பாடசாலை மாணவர்கள், சந்தை வியாபாரிகள், உத்தியோகத்தர்கள்எனப் பலரும் பயணம் செய்கின்றனர்.

இவ்வாறான இக்கிராமத்தின் வீதிகளோ, வீதிகளிலுள்ள மதகுகளோ மீள் குடியேற்றத்தின் பின்னர் இன்றுவரை எந்தவித புனரமைப்பும் செய்யப்படவில்லை. இதனால் இவ்வீதியூடாக பயணிப்போர் பெரும் அசௌகரியங் களை எதிர் நோக்குகின்றனர். சில வேளைகளில் விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயநிலையும் காணப்படுகின்றது.

இவ்வீதி, மதகுகளைப் புனரமைப்பதற்கென கடந்த 3 மாதங்களுக்கு முன்பு மணல், கற்கள் என்பன குவிக்கப்பட்ட நிலையிலும் இதுவரை அதற்கான வேலைகள் எவையும் ஆரம்பிக்கப்படாமல் அவை குவிக்கப்பட்ட இடங்களிலேயே இன்று வரை கிடக்கின்றன.

மேலும் இக்கிராமத்தை சேர்ந்த இருவர் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்களாகவுள்ளனர். இவர்கள் இருவரும் மக்களாலேயே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆவார்கள். இவர்களுக்கும் மேற்படி அம்பாள் குளம் கிராமத்தின் இவ்வவல நிலை தெரிந்திருக்கும்.

எனினும் இவர்களுக்கு பல தடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரை எதுவும் சாத்தியப்படுவதாகத் தெரியவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் காரணமாக இவ்வீதிகள் மேலும் மோசமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இக்கிராமத்தின் அயற்கிராமங்களான செல்வாநகர், உதயநகர், கனகபுரம், ஆனந்தபுரம் ஆகியவற்றின் வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள போதும் பிரதான சந்தைக்கட்டடம் அமைந்துள்ள இக்கிராமத்தின் வீதிகள் புனரமைக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவை தொடர்பாக கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்பாள் குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

## முல்லைத்தீவில் கரடி தாக்கியதில் இராணுவ கோப்ரல் படுகாயம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கரடியின் தாக்குதலுக்கு இலக்கான இராணுவ வீரர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் விடுதலைப் புலிகள் நிலை கொண்டிருந்த பெரியக் காட்டு பகுதிக்கு இராணுவப் பயிற்சியில் ஈடுபடச் சென்றிருந்த இராணுவ லான்ஸ் கோப்ரல் ஒருவரையே கரடியொன்று கடித்து காயப்படுத்தியுள்ளது.

இராணுவப் பயிற்சியில் ஈடுபடும் நோக்கில் காட்டினுள் புகுந்த இராணுவ குழுவொன்றின் மீது கரடி தாக்குதல் நடத்தியுள்ளது.

இத்தாக்குதலில் கோப்ரல் தரம் உடைய இராணுவ வீரரின் முகம் மற்றும் வலது கையில் படுகாயம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய கரடியை இராணுவத்தினர் சுட்டுக்கொலை செய்துள்ளனர். காயமடைந்த இராணுவ வீரர் அநுராதபுர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (எ-11)

## நாட்டின் எதிர்காலத்திற்காக சிறை செல்லவும் தயார் - வீரவன்ச

(கொழும்பு)

நாட்டின் எதிர்காலத்திற்காக சிறை செல்லவும் தயார் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுகளுக்கு பயப்படாத நான், எதற்கும் பயப்படப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். பத்ரமுல்லையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விமல் வீரவன்ச, தனியார் ஊடகம் ஒன்றின் ஊடாக நீதிமன்றத்தை பகிரங்கமாக விமர்சித்து நீதிமன்றத்தை அவமதித்தமைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## குளத்தில் இருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மருக்காரம்பளை குளத்தின் வான் பகுதியில் இருந்து கடந்த 4 ஆம் திகதி மதியம் வயோதிபர் ஒருவரின் சடலத்தினை பொலிஸார் மீட்டனர்.

இச்சடலம் மணியர்குளத்தில் வசிக்கும் பழனியாண்டி அருணாசலம் (வயது 68) என்பவருடையது என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் சடலத்தினை வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உத்தரவிட்டதுடன் உருக்குலைந்து காணப்பட்ட சடலத்தின் வலது கால் பகுதி மீன்களால் உண்ணப்பட்டிருக்கலாம் எனவும் சடலம் மிகவும் மோசமாக உருக்குலைந்து காணப்பட்டமையினால் சடலத்தினை உறவினர்களிடம் பிரேத பரிசோதனையின் பின்னர் ஒப்படைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மரணம் எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் தீர்ப்பு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவித்தார். (அ-9-266)

## சத்தியஞானக் கோட்ட உழவர் திருநாள் வழிபாடு

(சாவகச்சேரி)

மீசாலை வேம்பிராய் சமரச துர்க்க சன்மார்க்க சத்திய ஞானக் கோட்ட உழவர் திருநாள் வழிபாடு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு கோட்டத்தின் அகவல் மண்டபத்தில் மகா மந்திர நினைவு வழிபாட்டுடன் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அன்று பிற்பகல் 6.30 மணி வரை தொடர்ந்து பல்வேறு வழிபாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு இறுதியில் சிறப்புக் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளது.

ஜீவ காருணியமும் உழவுத் தொழிலும் என்ற தலைப்பில் நடத்தப்படும் கருத்தரங்கில் இந்திய மற்றும் இலங்கை அறிஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் இந்தியாவைச் சேர்ந்த தயவுத் திரு ஜ.இராமானுயம் நம் நாட்டைச் சேர்ந்த தயவுத்திரு க.ராஜன், கே.தயானந்தன், செ.சுப்பிரமணியம், து.குமரநாதன், வள்ளல் அடிமை கனகசபாபதி கேதீஸ்வரன் ஆகியோர் பங்கு பற்றி சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்வழிபாடு பற்றி விழாக்குழுவினர் தெரிவிக்கையில், உலகத்திலே கருணையோடு விவசாயம் தளைக்க வேண்டும் இறைவனாலே படைக்கப்பட்ட 84 இலட்சம் ஆன்ம பேத உயிரினங்களும் பசியான கொடும் தீயை அணைத்துக் கொண்டு வாழ வேண்டும். விவசாய பெருமக்கள் யாவரும் எல்லிசெல்வ செழிப்புடனும் கருணையோடு வாழ வேண்டும்.

உலகம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை ஏற்று ஜீவகாருணியமே தெய்வ வழிபாடாக கொண்டு வாழ வேண்டுமென்றே இவ்வழிபாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தனர். (அ-3-29)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பேரின்ப வெள்ளம்



அன்பும் கருணையும் உடைய தெய்வ நிலையானது விண்முதல் ஆறறிவாகி மனித மனத்தின்மூலம் தனது பரிமாணப் பயணச் சரித்திரத்தை உள்ளுணர்வாகக் காட்டிய பேரறிவுக்கு நன்றி கூறுமிடத்து அத்தகு உள்ளுணர்வு அடைந்த நம்மையே இறைநிலைக்கு அர்ப்பணம் செய்து மகிழ்ச்சியடைவோம்.

மேலும் உலக வாழ்வில் உயிரினங்களின் உற்பத்திக்கு ஏற்றவகையில் பெண்ணினத்தை வடிவமைத்து எல்லா உயிர்வகைக்கும் அன்பு காட்டி கருணையை வழங்கிக்காக்கும் அந்தப் பேராதார இறைநிலைக்கு நன்றிகூறி மனநிறைவு பெறுவோம்.

எல்லா உயிர் வகைகளுக்கும் உணவாகவும் மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும் சிக்கலில்லாமலும் வரையறை இன்றியும் தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக்காத்து வருகின்றன தாவர இனங்கள்.

அத்தகு தாவர வர்க்கங்களை அன்போடும் கருணையோடும் உருவாக்கி இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும் கருணைக்காகவும் இறைநிலைக்கு நன்றிகூறி அப்பெருமகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்.

ஒவ்வொரு நாளையும் இறைநிலையின் அன்பின் ஊற்றுப் பெருக்க நன்னாளாகவே கருதி என்றும் கொண்டாடுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செவ்வாய் கிரகத்திற்கு விண்கலம்; 2013 இல் சாதனை படைக்கும் இந்தியா

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இந்தியா செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் மூலம் செயற்கைக் கோளை அனுப்பி தகவல் சேகரிக்கவுள்ளது.

பிரதமர் மன்மோகன்சிங் கடந்த ஆண்டு சுதந்திர தினத்தின்போது உரையாற்றுகையில், செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலம் அனுப்பப்படும் என்று தெரிவித்திருந்தார். அதற்கான பணிகள் இப்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

'செவ்வாயில் மேற்கொள்ளப்படவுள்ள ஐந்து சோதனைகளுக்கான சாதனங்களை மத்திய அரசு இஸ்ரேலிடம் எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கவுள்ளது.

அங்கு மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைக்கான சாதனங்கள் எங்களுக்கு மார்ச் மாதத்துக்குள் கிடைக்கும்.

அவற்றை செயற்கைக்கோளில் பொருத்தும் பணியை ஏப்ரலில் தொடங்குவோம் என இஸ்ரேல் கூறியுள்ளது.

இதுவரைசெவ்வாய்க்குவிண்கலம் ஏதும் இந்தியா அனுப்பாத நிலையில் ஒக்டோபரில் இந்த திட்டம் வெற்றி பெற்றால் அது இந்தியா மேற்கொண்ட சாதனையாகவே கருதப்படும். (அ-2)

## கசாப் பாதுகாப்பு செலவினம் 21 கோடி ரூபா தள்ளுபடியானது

மும்பை தாக்குதல் குற்றவாளி அஜ்மல் கசாப்பின் பாதுகாப்புக்காக இந்தோ-திபெத் பொலிஸாரைப் பயன்படுத்தியதற்காக மகாராஷ்டிரா அரசு வழங்க வேண்டிய 21 கோடி ரூபா கட்டணத்தை வசூலிப்பதில்லை என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சிறையில் அஜ்மல் கசாப் வைக்கப்பட்டிருந்தபோது நான்கு ஆண்டுகளாக இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்பு பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர்.

இதற்கான கட்டணமான 21 கோடி ரூபாவை மகாராஷ்டிரா அரசு செலுத்த வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்தது.

ஆனால் அதை ஏற்க மறுத்த மகாராஷ்டிரா அரசு இந்தக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி வந்தது.

இந்நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் ஷிண்டே மும்பை ஆர்தர் சாலை சிறைக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் ஆய்வு செய்தார்.

மகாராஷ்டிரா அரசு வழங்க வேண்டிய மேற்படி கட்டணத்தை வசூலிப்பதில்லை என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும் அதற்குப் பதில் அந்தக் தொகையை மாநில அரசு சிறைத்துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ள பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## தனியார் விமானம் விபத்து; ஐந்து பேர் பலியாகினர்

பிரான்ஸ் நாட்டில் தனியார் சிறு விமானம் விபத்துக்குள்ளானதில் 5 பேர் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் பிரஸ்ஸியக்ஸ் கிராமத்தில் உள்ள கிரெனொபிள் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் தனியாரின் சிறு விமானம் ஒன்று 5 பேருடன் புறப்பட்டது.

பயணித்த சிறு நேரத்திலேயே விமானம் செயலிழந்துவிட்டதால் விமானம் விழுந்து நொறுங்கியதில் 5 பேரும் பலியாகினர்.

இறந்தவர்கள் குறித்து உடனடியாக தகவல் கிடைக்கவில்லை. உள்ளூர் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்து வருகின்றனர். (அ-2)

## இந்தியாவில் உலகின் மிகப் பெரிய டெலஸ்கோப்

சூரியனைப் பற்றி ஆய்வு செய்வதற்காக உலகின் மிகப் பெரிய சோலார் டெலஸ்கோப் 300 கோடி ரூபா செலவில் இந்தியாவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் நடைபெறும் 100 ஆவது இந்திய மாநாட்டில் பங்கேற்ற இத் திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் சிராஜ் ஹசன் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இந்திய சீன எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே லடாக் மாவட்டத்தின் பங்காங் ஏரிக்கு அருகே உள்ள ஹன்லே அல்லது மெரக் என்ற இடத்தில் தேசிய சோலார் டெலஸ்கோப் அமைக்கப்படவுள்ளது.

இதன் கட்டுமானப் பணி இந்த ஆண்டின் பிற்பாதியில் தொடங்கி எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில் முடியும். பெங்களூரில் உள்ள வான்கோள் ஆராய்ச்சி மையம் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும்.

இந்த டெலஸ்கோப் 2 மீற்றர் விட்டம் கொண்டதாக இருக்கும். இதன்மூலம் உலகின் மிகப் பெரிய டெலஸ்கோப் என்ற பெயர் பெறும்.

இப்போது அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள டெலஸ்கோப்தான் (1.6 மீற்றர்) உலகின் மிகப் பெரிய டெலஸ்கோப் இதுவாகும். (அ-2)

### பகவத்கீதையை படித்து எம்.பியாக பதவியேற்ற பெண்



அமெரிக்காவின் ஹவாய் பகுதியை சேர்ந்த துளசி கபார்டு என்பவர் பகவத்கீதையை படித்து எம்.பியாக பதவியேற்றுக் கொண்டார்.

அமெரிக்காவில் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலில் ஹவாய் பகுதியிலிருந்து ஜனநாயக கட்சி சார்பாக துளசி கபார்டு (வயது 31) பிரதிநிதிகள் சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கடந்த 3 ஆம் திகதி பதவி ஏற்றனர்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபை சபாநாயகர் ஜான் போனர் புதிய உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். அப்போது துளசி கபார்டு பகவத்கீதையை படித்து உறுதிமொழி ஏற்றார்.

இது குறித்து துளசி கூறியதாவது, என் தாய் இந்து. தந்தை கத்தோலிக்க கிறிஸ்தவர். பகவத்கீதை மன அமைதி, வாழ்க்கையின் இக்கட்டான தருணங்களில் நமக்கு வழிகாட்டுவது.

இளம் பருவத்திலேயே பகவத்கீதை எனக்கு கற்பிக்கப்பட்டது. இதனால் நான் கீதையை படித்து பதவியேற்றுக் கொண்டேன் என்றார். (அ-2)

## அதிக வயதுடைய மூதாட்டி மரணம்

அமெரிக்காவில் மூத்த குடிமகள் என்ற பெயர் பெற்ற மூதாட்டி மமி ரியார்டன் (வயது 114) காலமானார்.

இவர் மரணமடைந்துவிட்டதாக அவருடைய இரு பிள்ளைகள் தெரிவித்துள்ளனர்.

மறைந்த மூதாட்டி இருவாரங்களுக்கு முன் அமெரிக்காவின் அதிக வயதான மூதாட்டி என ஆய்வில் தெரிய வந்தது.

கடந்த மாதம் ஜப்பானில் 115 வயதான மூதாட்டி மறைந்ததை அடுத்து அவர்தான் அதிக வயதுடைய மூதாட்டியாவார். (அ-2)

## பாலியல் குற்றவாளிக்கு தனிமை சிறை - கருணாநிதி

பாலியல் குற்றம் புரிந்தவர்களுக்கு மரண தண்டனையை விட ஆயுள் முழுவதும் தனிமைச் சிறையில் அடைப்பதே கடுமையான தண்டனை என்று திமுக தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான செலவை அரசு ஏற்பதுடன் அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் தமிழகத்தில் குண்டர் சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும் அரசியல் எதிரிகளை பழி வாங்க அது பயன்படுத்தப்படுவதாகவும் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## மாவோயிஸ்டுகளுக்கு நவீன ஆயுத பயிற்சி?

மாவோயிஸ்டுகளுக்கு நவீன ரக துப்பாக்கிகளைக் கையாள பிலிப்பைன்ஸிலிருந்து ஊடுருவிய பயங்கரவாதிகள் பயிற்சி அளி



த்து வருவதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

மாவோயிஸ்டுகளிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் இந்த தகவல் வெளியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிப் படை தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாகும்.


இந்த அமைப்பினர் மாவோயிஸ்டுகளுக்கு வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட நவீன ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வழங்கியதுடன் அவற்றை கையாள்வதற்கான பயிற்சியையும் அளித்துள்ளனர்.

இந்த ஆயுதங்கள் எங்கிருந்து வழங்கப்பட்டன என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ-2)

## புதுடில்லியில் அழிவு; பனிப் பொழிவு

டில்லி உத்தர பிரதேசம் அரியானா உள்ளிட்ட வட மாநிலங்களில் இந்த ஆண்டு வரலாறு காணாத வகையில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. டில்லியில் நேற்று அதிகாலை பனிப்பொழிவு மிக அதிகமாக இருந்தது. தட்ப வெப்பநிலை 1.9 டிகிரி செல்சியசாக இருந்தது.

இது வழக்கத்தை விட 5 டிகிரி செல்சியஸ் குறைவாகும். டில்லியில் வெப்பநிலை 2.9 டிகிரி செல்சியசாக குறைந்திருந்தது. கடும் குளிர், பனிப்பொழிவு காரணமாக நேற்று முன்தினம் உத்தரப் பிரதேசத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். (அ-2)



இந்தியாவிற்கு வருகை தந்துள்ள மொரீசியஸ் ஜனாதிபதி ராஜ்கேஸ்வர் புர்யாக் தலைநகர் டில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## துருக்கியை பாதுகாக்க விரைகிறது அமெரிக்கா

(டமாஸ்கஸ்)

சிரியாவின் தாக்குதலில் இருந்து அயல் நாடான துருக்கியைக் காப்பாற்ற பேட் ரியாட் ஏவுகணைகளோடு அமெரிக்க இராணுவம் துருக்கி சென்றுள்ளது.

துருக்கியில் எல்லைப் பகுதிகளில் உள்ள நகரங்களில் ஸ்கட் ஏவுகணைகளை சிரியா கொண்டு வந்ததும் அமெரிக்கா, ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து துருக்கிக்கு பாதுகாப்பு வழங்க முன்வந்துள்ளன.

இதற்கமைய அமெரிக்க பேட்சியாட் ஏவுகணைகளை கொண்டு வந்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் சிரியா துருக்கி மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா சிரியாவுக்கு தக்க பதிலடி கொடுக்கும்.

துருக்கியின் கஸியன்டேல் எனும் இடத்தில் 27 அமெரிக்கப் படைகள் முகாமிட்டுள்ளன. எனினும் அமெரிக்கா தனது படைகள் துருக்கி சென்றிருப்பது குறித்து எந்த தகவலும் வெளியிடவில்லை. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்டத்துக்கு விண்ணப்பிக்குக

(கொழும்பு)

வருடாந்தம் தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு கல்வி அமைச்சும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தும் 16 வயதின் கீழ் ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் வட மாகாணப் பாடசாலைகளிடமிருந்து கோரப்படுகின்றது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான மேற்படிப் போட்டிகள் எதிர்வரும் 10.01.2013 அன்று யா/நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போட்டிகள் அன்றைய தினமே வ/வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

இறுதிப் போட்டிகள் யாவும் 12.01.2013 சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

மேற்படிப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

01.யாழ்.மாவட்டப் பாடசாலைகள்:

சண்.தயாளன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) யாழ்ப்பாணக் வலயக் கல்வி அலுவலகம், நல்லூர், யாழ்ப்பாணம்.

02.வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள்:

A.M. சுபைர், உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகம், வவுனியா.

# கிரிக்கெட் இறுதிப்போட்டி

(கரவெட்டி)

அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம், வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக் கழகம் ஆகியன தெரிவாகியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் காமாட்சி அணியும், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் சாந்தியுஸ்ரார் அணியும் வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (24)

# உதைபந்தாட்ட போட்டி

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட ரீதியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டிகளில்,

பொலிகண்டி வின்மின் A அணி மயிலங்காடு ஞானமுருகன் B அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

2-வது போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் A அணி மணற்காடு சென் அன்ரனீஸ் அணியை 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி A அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய அணியும்,

பிற்பகல் 4.30 மணிக்கு ஆதிசக்தி B அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் A அணியும் மோதவுள்ளது. (24)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(கரவெட்டி)

வடமராட்சி திருநாவலூர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் அணிக்கு 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை எதிர்வரும் சனி, ஞாயிறு திணங்களில் காலை 8 மணிக்கு நடத்தவுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகம் விரைவாக விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (24)

# இந்தியா ஆறுதல் வெற்றி தொடர் பாகிஸ்தான் வசம்



இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இந்திய அணிக்கும் இடையிலான 3-வதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்திய அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

டில்லி பெரோஷ்ஷா கோட்லா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 43.4 ஓவர்களில் 167 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முதலாவது விக்கெட்டை 19 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன்பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக மகேந்திரசிங் தோனி 55 பந்து களில் 36 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 60 பந்துகளில் 31 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 39 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சஜீட் அஜ்மல் 24 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், மொஹமட் இர்பான் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுக்களையும், ஜுனைட் கான், உமர் குல், மொஹமட் ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

168 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந் தது.

ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி, அதன்பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மிஸ்பா உல் ஹக் 82 பந்துகளில் 39 ஓட்டங்களையும், நசீர் ஜாம்ஷெட் 64 பந்துகளில் 34 ஓட்டங்களையும், உமர் அக்மல் 50 பந்துகளில் 25 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் இறுதிவரை போராடி 31 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக இஷாந்த் சர்மா 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், புவனேஷ்வர் குமார் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரவிச்சந்திரன் அஷ்வின் 47 ஓட்டங்களுக்கு



2 விக்கெட்டுக்களையும், ஷமி அஹமட் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ரவீந்திர ஜடேஜா 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் தோனியும், போட்டித் தொடரின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் நசீர் ஜாம்ஷெட் தெரிவாகினர்.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை பாகிஸ்தான் அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை வென்றது ஆஸி



அவுஸ்திரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலியா அணிக்கும் இடையிலான 3-வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் தோல்வியடைந்துள்ளது.

சிட்னியில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி லஹிரு திரிமன்னவின் 91 ஓட்டங்கள், மஹேல ஜெயவர்த்தனவின் 72 ஓட்டங்களின் துணையோடு 294 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜக்ஸன் பேர்ட் 4 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஸ்ரார்க் 3 விக்கெட்டுக்களையும், பீற்றர் சிடில் 2 விக்கெட்டுககளையும், நேதன் லயன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மத்யூ வேட்டின் ஆட்டமிழக்காத 102, பிலிப் ஹியூஸின் 87, டேவிட் [illegible], மைக்கல் கிளார்க்கின் 50 ஓட்டங்களின் [illegible] டுக்களை இழந்து 432 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இனிங்ஸை இடை நிறுத்தியது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பா ரங்கன ஹேரத் 4 விக்கெட்டுக்களையும், நுவான் பிரதீப் 2 விக்கெட்டுக்களையும், திலகரட்ண டில்சான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

138 ஓட்டங்கள் என்ற பின்னிலையில் தனது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்



தாடிய இலங்கை அணி திமுத் கருணாரத்னவின் 85, டினேஷ் சண்டிமாலின் ஆட்டமிழக்காத 62 ஓட்டங்கள், மஹேல ஜெயவர்த்தனவின் 60 ஓட்டங்களின் துணையோடு 278 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலிய அணிக்கு 141 ஓட்டங்களை வெற்றியிலக்காக வழங் கியது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன், ஜக்ஸன் பேர்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஸ்ரார்க், பீற்றர் சிடில், நேதன் லயன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

141 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 42.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

ரங்கன ஹேரத் மிகச் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தியிருந்த போதிலும், தனது இறுதி டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய மைக்கல் ஹசி இறுதி வரை களத்தில் நின்று வெற்றியை உறுதி செய்தார்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக எட் கோவன் 36 ஓட்டங்களையும், பிலிப் ஹியூஸ் 34 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 29 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 3 விக்கெட்டுக்களையும், திலகரட்ண டில்சான், சுரங்க லக்மால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஜக்ஸன் பேர்ட் தெரிவானதோடு, போட்டித் தொடரின் நாயகனாக மைக்கல் கிளார்க் தெரிவானார்.

# தாச்சி சங்கத்திற்கு புதிய நிர்வாகம்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று 10 மணிக்கு இடம்பெற்றது.

இதில் தலைவராக க.தயாளன் (கைதடி), உப தலைவராக மு.சுகனதாஸ் (கைதடி), செயலாளராக அனந்தீஸ்கரன் (இணுவில்), உப செயலாளராக அ.கயித்தன் (சண்டிலிப் பாய்), பொருளாளராக க.ஜீனதாஸ் (அளவெட்டி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (3,24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வாகனத் தரிப்பிடங்கள் அகற்றப்படுகிறது



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் உள்ள வாகனத் தரிப்பிடங்களை அகற்றுவதற்கு யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 15-ம் திகதி யாழ் போதனா வைத்திய சாலையின் புதிய கட்டிடத் தொகுதி திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இந்த நிலையில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த வடமாகாண ஆளுநர்,

வைத்தியசாலை வீதியில் உள்ள வாகனத் தரிப்பிடங்களை அகற்றுமாறு உத்தரவிட்டதையடுத்து யாழ். மாநகர சபை இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

அத்துடன் வைத்தியசாலைக்கு முன்னாக உள்ள வீதியில் இருக்கும் மணிக்கூட்டுக் கோபுரம் இதுவரை செயற்படாதுள்ளது. இதனையும் 9இலட்சம் ரூபா செலவில் துரிதமாகத் திருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (எ-11)

## பிரதம நீதியரசர் இவ்வார...

பாராளுமன்ற அறிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி, பிரதம நீதியரசரை பதவி விலக்குவது தொடர்பான உத்தரவினை பிறப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் பாரியளவில் அழுத்தங்களை பிரயோகித்த போதிலும், அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது என தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்குவதா இல்லையா என்பது குறித்து தீர்மானிப்பதற்காக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தவாரம் அறம்கூறுநர்கள் சபையாக மாறவுள்ளனர்.

பிரதம நீதியரசரின் பதவி,தொடர்பில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த வாரம் அறம்கூறுநர்கள் சபையாக மாறவுள்ளனர்.

கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக இல்லை என்பதை தீர்மானிப்பதற்காக கட்சித் தலைவர்களின் இணக்கத்தின் அடிப்படையில்எதிர்வரும் 10ஆம் அல்லது 11ஆம் திகதி நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வாய்ப்பிருப்பதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அதே வேளை விவாதத்திற்காக இரண்டு தினங்கள் வழங்கப்படுமா அல்லது எதிர் கட்சிகளுக்கு அதிக நேரத்தை வழங்கி ஒரே நாளில் மாத்திரம் விவாதம் நடத்தி இறுதித் தீர்மானம் அறிவிப்பதா என்பது பற்றி கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் ஆளும் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இது குறித்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணக்கத்திற்கு வர வேண்டும் என தெரிவித்த அவர்; நாளை அதாவது புதிய வருடத்தின் நாடாளுமன்றத்தின் கூட்டப்படும் தினத்தில் கட்சித் தலைவர்கள் கூடவுள்ளனர்.

நாடாளுமன்றம் அறங்கூறுநர் சபையாக மாறி, நம்பிக்கையில்லாத தீர்மானம் குறித் து விவாதம் நடத்தி பிரதம நீதியரசர் குற்றவாளியா இல்லையா என்பதை தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன்போது, பிரதம நீதியரசர் குற்றவாளி அல்ல எனவும் அவர் பதவியில் இருந்து நீக்கப்படகூடாது எனவும் போதுமான பெரும்பான்மை பலத்துடன் விவாதத்தின் யோசனை நிறைவேற்றப்பட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரத்துச் செய்யப்படும்.

எனினும் பெரும்பான்மையான வாக்குகள் பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்க வேண் டும் எனத் தீர்மானித்தால், சபாநாயகர் இது பற்றி ஜனாதிபதிக்கு அறிவிப்பார். இதன் பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்து, பிரதம நீதியரசரை அந்தப்பதவியிலிருந்து நீக்கியதாக அறிவிப்பார் எனவும் பிரதி சபா நாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி எந்த சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்றத்தை கூட்டி தனது இந்தத் தீர்மானத்தை அறிவிக்க முடியும் எனக் கூறியுள்ளார். (எ-11)

## சட்டம் ஒழுங்கு...

இதற்கு முன்னர் எப்போதும் ஏற்பட்டதில்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை மற்றும் நம்பிக்கையில்லா தீர்மானம் தொடாபில சபாநாயகரின் அறிக்கையைத் தொடர்ந்தும் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளியிடப்படும் என அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். (எ-11)

## ஐ.நா இலங்கைக்கு...

பற்றப்பட வேண்டும் என்றும் கெப்ரில்லா குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஏற்கெனவே கெப்ரில்லா தனது கருத்தை தெரி வித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இலங்கை அரசாங்கம் , அதற்கான பதிலையும் அனுப்பி வைத்திருந்தது.

இந்நிலையில் அவர் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நடைமுறைகள் எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கெப்ரில்லா அறிவித்துள்ளார். (எ-11)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
Alliance Francaise de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
(1420)
61, Kachcheri - Nallur Road, Jaffna. Phone : 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

தேவை
ஒப்செட் பிறின்டிங் மெசின் மைன்டர் தேவை
off-set( KORS) PRINTING MACHINE
நன்கு அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும்.
அனுபவத்திற்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
Contact: 0777960172
(2059)

# பௌத்த பிக்கு சென்னையில் தற்கொலை

சென்னை எழும்பூரில் உள்ள இலங்கை பௌத்தர்களால் நடத்தப்பட்டு வரும் மகா போதிச்சங்கம் என்ற பெயரிலான பௌத்த மடத்தில் இளம் பிக்கு ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

தனது இடுப்புப்பட்டியால் அவர் தூக்கிட்டு மரணித்தாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எழும்பூர் புகையிரத நிலையத்திற்கு எதிரே கென்னத் லேனில் உள்ள மகாபோதி சங்கத்திலேயே இந்த சம்பவம் நேற்று காலை இடம் பெற்றுள்ளது. ஜம்மு காஷ்மீரை பூர்வீகமாகக் கொண்ட இவர், பெங்களூரில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இன்று முதல் செயற்படா விட்டா...

யாழ்.பல்கலைக்கழகத்தில் எவ்வித தடங்கலும் இன்றி சித்தமருத்துவத்துறை, நுண் கலைத்துறை போன்ற துறைகள் கல்விப் பணிகளை முன்னெடுத்து வந்தன.

கலைத்துறை, வர்த்தகத் துறை மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்த காரணத்தினாலேயே கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டன எனவும் அவர் கூறினார்.

அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அமைச்சர் கூறினார்.

விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து வாராவாரம் ஆராயப்பட்டு வருகிறது.

விசாரணைகளின் போது அவர்களுக்கு சட்டத்திற்குப் புறம்பான தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு இருப்பது தெரியவந்தால்,

புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவார்கள். இருந்தபோதிலும் தைப்பொங்கலுக்கு முன்னர் அவர்கள் நால்வரும் விடுதலையாகக்கூடும் என தான் நம்புவதாக அவர் தமிழோசையிடம் கூறினார்.

திங்கட்கிழமை பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட பிறகும் அங்கும் கல்விப் பணிகள் முழுமையாக நடைபெறாது விட்டால் பண விரயத்தை தடுக்கும் நோக்கில் அதை மூடுவது என்றும் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மாணவர்களும் திங்கட்கிழமை முதல் வகுப்புகளுக்கு வர உறுதி மொழி கொடுத்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கடந்த வரம் நடைபெற்றகூட்டத்தில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, த.தே.கூட்டமைப்பினர், மாணவர்கள் ஒருங்கிணைப்பாளர்கள், யாழ். கட்டளைத் தளபதி, பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டதாகவும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறினார். (எ-11)

## பல்கலைக்கழக...

வாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை அமர்வுகளின்போது இந்த வெகுஜன வாக்கெடுப்பு தொடர்பான யோசனை முன்வைக்கப்பட உள்ளது.

புலி ஆதரவாளர்களும், புலம்பெயர் தமிழர்களும் இந்த யோசனையை முன் வைக்கவுள்ளனர்.

வடக்கு கிழக்கு மக்களின் சார்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக வெகுஜன வாக்கெடுப்பு நடத்தும் இரகசிய திட்டமொன்றை புலிஆதரவாளர்கள்மேற்கொண்டுவருகின்றனர்.

தென்னாபிரிக்கா இந்த யோசனையை முன்வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரிட்டன் தமிழர் பேரவை மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்கள் இந்த வாக்கெடுப்பு தொடர்பில் அண்மையில் தென்னாபிரிக்காவிற்கு சென்று பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

சீனா,ரஷ்யா,கியூபா போன்ற நாடுகள் இம்முறை மனித உரிமைப்பேரவையில் அங்கம் வகிக்காத காரணத்தால் இந்த யோசனைத் திட்டத்தை நிறைவேற்ற புலி ஆதரவு அமைப்புக்கள் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இரண்டு நாடுகள் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட உள்ளது. வட்டுக்கோட்டை பிரகடனத்திற்கு நிகரான தமிழீழ கோரிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் முன் வைக்கத் திட்டமிட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்படுகிறது. (எ- 11)

## தாயை...

உடலை அணைத்தபடி மகனின் சடலம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலமாக மீட்கப்பட்ட,தாயும் மகனும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலையில் இருந்து காணாமல் போயுள்ளனர். இந் நிலையில் உறவினர்கள் தேடிச்சென்றபோது நீர் நிரம்பிய பள்ளத்தினுளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தினால் அப்பகுதிச் சோகம் நிலவுகின்றது. இதேவேளை சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட நீதிபதி விசாரணைகளை மேற் கொண்டுள்ளதுடன் சடலத்தினை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உத்தரவிட்டதுடன் பிரேத பரிசோதனை மேற் கொள்ளவும் பணித்துள்ளார். (எ-6,266)

## வங்காள விரிகுடா...

செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கடற் பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 40 கிலோமீற்றர் முதல் 50 கிலோமீற்றர் வரையிலான வேகத்தில் வடகிழக்கு அல்லது வடக்குத் திசையிலிருந்து வீசும்.

இந்தக் காற்றின் வேகமானது சில சந்தர்ப்பங்களில் அம்பாந்தோட்டை ஊடான காலி வரையிலான கடல் பிரதேசங்களில் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் முதல் 8[illegible] வரையிலான வேகத்தில் அதிகரித்து வீசலாம் எனவும் தெரிவித் துள்ளார்

இவை இன்று வரையிலான வானிலை முன்னறிவிப்பு என வளிமண்டளவியல் அதிகாரி க. சூரியகுமாரன் தெரிவித்துள்ளார். (எ-11)

## கட்சித் தலை...

இதேவேளை திவிநெகும சட்ட மூலத்துக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது தொடர்பில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் தீர்மானம் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தற்சமயம் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் திவிநெகும சட்டமூலம் தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஏற்கெனவே கொண்டிருந்த தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே இந்த சட்டமூலத்திற்கு எதிராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அதற்கு ஆதரவு அளித்து வாக்களிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் செயற்படவுள்ள முறைமை குறித்து கூட்டமைப்பு இன்னும் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு சட்டமூலங்கள் தொடர்பிலும் இன்று நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கவிருப்பதாக லங்கா சமசமாஜ கட்சி தெரிவித்துள்ளது. (எ-11)

கண்ணீர் அஞ்சலி
யாழ்ப்பாண வலயக் கல்வி
அலுவலகத்தில் ஆசிரிய
ஆலோசகராக கடமையாற்றும்
செல்வி ப.சிவசித்திரா
அவர்களின் அன்புச் சகோதரி
செல்வி P.S.கலாரஞ்சிதம்
அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சமூக விஞ்ஞான ஆசிரியர்கள்,
யாழ்.கல்வி வலயம்

(1423)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org